www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

CPI 100 Years இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 | இதழ் 04 | 2025 ஏப்ரல் 27 - மே 03 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## ஏஐடியுசி - சிஐடியு கூட்டறிக்கை

# 2025 - மே தினச் சூளுரை



**தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் தங்கள் சட்டபூர்வமான உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்ற சிந்தனையை முளையிலேயே கிள்ளி எறியும் முயற்சிகளும் அதிகரித்து வருகின்றன. இதற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து முன்னேறுவோம் என்று தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், சிஐடியு தமிழ் மாநிலக்குழு பொதுச்செயலாளர் ஜி.சுகுமாறன் கூட்டாக விடுத்துள்ள மே நாள் சூளுரையில் குறிப்பிட்டுள்ளனர்.**

அவர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கை வருமாறு:

8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் சமூகப் பணி, 8 மணி நேர ஒய்வு என்ற முழக்கத்தை முன் வைத்து போராடிய தியாகிகளை, போராட்ட உணர்வை போற்றக் கூடிய, உலகத் தொழிலாளர்கள் தங்கள் உரிமையை வென்றெடுத்த நாளான மே 1 ஐ கொண்டாடுவோம். புதிய உரிமைகளை வென்றெடுக்க போராடுவோம். அணி திரள்வோம்.

உழைப்பு நேரம் நவீன இயந்திரங்களை கண்டறியும் முன் ஒய்வற்ற ஒன்றாக இருந்தது. தொழிலாளர்களை மிகக் கடுமையாக சுரண்டியது. இன்று செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் கண்டறியப்பட்டு அனைத்து துறைகளிலும் தீவிரமாக பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் வேலை நேரத்தை குறைக்க முதலாளித்துவம் விரும்பவில்லை. மாறாக வேலை நேரத்தை அதிகரிக்கவும், ஆட்குறைப்பு செய்யவும், இந்த நவீன கண்டுபிடிப்புகளையும், இயந்திரங்களையும் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள்.

தொழிலாளர்களின், தொழில்நுட்ப வல்லுனர்களின் அறிவியல் கண்டறிதல், லாபத்தை மேலும் மேலும் கொள்ளை லாபமாக மாற்றிக் கொள்ள பயன்படுத்தப்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம்





## திருவனந்தபுரத்தில் முக்கிய ஆலோசனை

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம், ஏப்ரல் 23, 24, 25 தேதிகளில், கேரளா மாநிலக் குழுவின் தலைமையகமான எம்.என். ஸ்மாரகத்தில் கேரள மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம் தலைமையில் நடைபெற்றது.**

கூட்டம் துவங்கு முன்பு, அலுவலகத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள கேரள முன்னாள் முதல்வர் சி.அச்சுதமேனன் சிலைக்கு தேசியக் குழு உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

அதுல் குமார் அஞ்சான், போப் பிரான்சிஸ், எஸ்.மணிவேல் உள்ளிட்டோர் மறைவுக்கு அஞ்சலித் தீர்மானத்தை டாக்டர் காங்கோ முன்மொழிய கூட்டம் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தியது.

மாநிலத் தலைமையகத்தை மிக அழகாக, வசதியாக மறுவடிமைத்துள்ளதற்காகப் பொதுச் செயலாளர் டி.ராஜா, கேரள மாநிலக் குழுவைப் பாராட்டினார்.




தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### ஜெகதீப் தங்கருக்கு ஏன் இந்தக் கொந்தளிப்பு?

நீண்ட காலமாக மசோதாக்கள் கிடப்பில் கிடந்தால், அது செத்துப் போய்விட்டது என்று பொருள்படும் என்று கூறியவர் யார்? எவரோ அல்ல! அரசியலமைப்புச் சட்டப்படி குடியரசு தலைவரால் நியமனம் செய்யப்பட்ட ஆளுநர் ஆர்.என்.ரவி ஆவார்.

... பக்கம் 2

### ஆர்.எஸ்.எஸ் அணியும் புதிய முகமூடிகள்!



பாஜக ஆளும் மாநிலங்களில் குறிப்பாக உத்தரப்பிரதேசத்தில் தலித்துகள் தாக்குதலுக்கு உள்ளாவதும், பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப் படுவதும் தொடர்கதையாக இருக்கிறது. இன்றும் கோவில்களில் பட்டியல் சாதியினர் நுழைந்து வழிபட முடியாத சூழலில் உள்ளது.

... பக்கம் 3

### சட்டப்பேரவையும் உச்ச நீதிமன்றமும் சங்கிகளின் பகடைக்காய்களா?

தமிழ்நாடு ஆளுநர், மசோதாக்களுக்கு ஒப்புதலளிக்க மறுப்பதை விசாரித்த உச்ச நீதிமன்றம், 414 பக்கங்களுக்கு நீண்ட ஒரு தீர்ப்பை வழங்கியது. மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் காலம் வரையறை நிச்சயித்தது.

... பக்கம் 4

### துணைவேந்தர்களை அழைத்து வெட்டி வேலை பார்க்கும் வேந்தர் ரவி

மாநிலத்தின் ஆளுநர் என்ற கடமைப் பொறுப்பில் இருப்பதால் மட்டுமே அவர் தனது அலுவல் நிலை சார்ந்து பல்கலைக்கழகங்களின் வேந்தராகக் கருதப்படுகிறார். எனவே, அமைச்சரவையின் அறிவுரையினைப் பெற்றுதான் வேந்தர் செயல்படவேண்டும் என்ற நடைமுறை விடுதலைக்குப் பின்னர் பல்லாண்டுகளாக நீடித்து வந்தது.

... பக்கம் 5

### பற்றிப் படரும் இந்துத்துவ பாசிசம்

பாஜக அரசின் நடவடிக்கைகள் வெறுப்பு அரசியலை விரிவாக விதைத்துள்ளன. சமூகத்தில் ஆழமான பிளவுகளை உருவாக்கியுள்ளன. நீதித்துறை, தேர்தல் ஆணையம் போன்ற தன்னாட்சி நிறுவனங்களிலும், காவல்துறை போன்ற அரசுத் துறைகளிலும் சங்கிகளை ஊடுருவச் செய்ததுடன், தலைமைப் பொறுப்புகளிலும் நியமித்துள்ளனர்.

... பக்கம் 14

ஜனசக்தி

கட்சிக் கடிதம்

# ஏன் இந்தக் கொந்தளிப்பு?



போர்க்குணமிக்க தோழர்களே!

**நாட்டின் குடியரசு துணைத் தலைவர் கொந்தளித்துள்ளார். அவர் சாதாரணமானவர் அல்ல, பத்தோடு பதினொன்றாகக் கருதக்கூடியவர் அல்ல, ஆக உயர்பொறுப்பை வகிக்கக் கூடியவர், மாநிலங்களவையின் தலைவர், தற்போதுள்ள குடியரசுத் தலைவர் பதவிக்காலம் முடிந்து, அடுத்த குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்கும் வாய்ப்புள்ளவர்.**

அத்தகைய பெரும் பொறுப்பை வகிக்கக் கூடியவரும் எதிர்காலத்தில் பெரும் பொறுப்புக்கு வரக்கூடிய வாய்ப்புள்ளவருமான குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தங்கர் கொதித்தெழுந்துள்ளார்.

இவர் தான் வகிக்கும் நாட்டின் உயர் பொறுப்புகளை மறந்து, வகிக்கும் பொறுப்புகளுக்கு இழிவு தேடும் நிலையை உருவாக்கிக் கொந்தளித்து இருப்பது மிகக் கவலைக்குரியது.

தன்கர் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் பிரதி நிதியாக இருக்கலாம், அவ்மைப்பிற்கு விசுவாசமுள்ளவராகக் கூட இருக்கலாம்.

அதற்காக உச்ச நீதிமன்றத்தைச் சாடுவதற்கு அவருக்கு அனுமதி அளித்தது யார்?

உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் வெளிவரும் ஒவ்வொரு காலகட்டத்திலும் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்புகள் என்று வரவேற்றுப் புகழாரம் சூட்டியவர்கள், இன்று கொதிப்பது ஏன்?



உலையில் போட்ட அரிசி வேகுவதற்கு முன்னர், நொய்யரிசிகள் வெந்து மேலே வந்து கொந்தளிக்கும். நொய்யரிசி தடபுட வென கொந்தளிப்பது போல் இன்று தன்கர் கொந்தளித்துள்ளார். ஏன் கொந்தளிக்க வேண்டும்?

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பேரவை நிறைவேற்றிய மசோதாக்களை அவர் ஏற்றுத் தனது ஒப்புதலை வழங்க வேண்டும்.

அல்லது திருத்தம் இருப்பின், அத்தகைய திருத்தங்களைக் குறிப்பிட்டுத் திருப்பி அனுப்பலாம். அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம்.

எதனையும் செய்யாமல் மசோதாக்கள் அனைத்தும் ஆளுநர் மாளிகையில் முடங்கிக் கிடக்கின்றன.

இவை குறித்து ஆளுநர் என்ன கூறினார். உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டிய கட்டாயமில்லை, கால வரம்பின்றி மசோதாக்களை வைத்துக் கொள்ளலாம், அது குறித்து எவரும் கேள்வி கேட்க முடியாது.

நீண்ட காலமாக மசோதாக்கள் கிடப்பில் கிடந்தால், அது செத்துப் போய்விட்டது என்று பொருள்படும் என்று கூறியவர் யார்? எவரோ அல்ல! அரசியலமைப்புச் சட்டப்படி குடியரசு தலைவரால் நியமனம் செய்யப்பட்ட ஆளுநர் ஆர்.என்.ரவி ஆவார்.

வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் அரசுக்கு எதிராக, பேரவைக்கு எதிராக தமிழ்நாடு ஆளுநர் செயல்பட்ட போது குடியரசுத் தலைவருக்கு, துணைத் தலைவருக்கு, பிரதமருக்கு உள்துறை அமைச்சருக்கு இவை எல்லாம் தெரியாதா?

இவர்கள் ஊடகங்களைப் பார்ப்பது இல்லையா? நாளேடுகளைப் படிப்பது இல்லையா?

தொலைக்காட்சியில் பார்த்தார்கள், நாளேடுகளில் வரும் செய்திகளையும் வரி விடாமல் படித்தார்கள், இவற்றிற்கும் மேலாக ஒன்றிய அரசின் சக்தி வாய்ந்த உளவுத்துறை ஆளுநரின் அராஜகம் குறித்து மேற்கண்ட பெரிய மனிதர்களுக்கு எடுத்துரைக்கவில்லையா? உளவுத்துறை எழுத்துப்பூர்வமாகக் கொடுத்திருக்கும் அறிக்கைகளைப் பார்க்காமல், படிக்காமல் இருப்பார்களா?

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ்நாட்டு எட்டுக்கோடி மக்களின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 39 நாடாளுமன்ற



உறுப்பினர்களும் கையெழுத்திட்டு குடியரசுத் தலைவரை நேரில் சந்தித்து தமிழக ஆளுநரின் அரசியலமைப்புச் சட்ட விரோதச் செயல்கள் குறித்தும், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டுள்ளது குறித்தும் விரிவான கோரிக்கை விண்ணப்பம் அளிக்கப்பட்டது.

அவ்விண்ணப்பம் குறித்து இன்று வரை குடியரசுத் தலைவர் மாளிகை பதில் அளிக்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களை மதிக்கும் லட்சணம் இது தானா? 39 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் அவமதித்துள்ளார்.

மொத்தத்தில் ஆளுநர், பிரதமர், குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், உள்துறை அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டைப் புறக்கணிக்கின்றார்கள், அவமதிக்கின்றார்கள்.

அப்போதெல்லாம் வாய்மூடி மௌனமாக இருந்து கொண்டு வேடிக்கை பார்த்தவர்கள் இன்று கொதிப்பது ஏன்?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சட்டபூர்வமாகச் செயல்பட்டு வருகின்றது. அத்தகைய அரசுக்கு எதிராக ஓர் போட்டி அரசை ஆளுநர் ரவி நடத்திக் கொண்டுள்ளார்.

ஆளுநர் மாளிகையை அரசியல் கூடமாக்கி, ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் பிரச்சாரக் களமாக்கிச் செயல்பட்டு வருகின்றார்.

தான்தோன்றித்தனமாக ஊர் தோறும் செல்கின்றார். ஆளுநர் என்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊர் ஊராகச் சுற்றி வருகின்றார்.

செல்லும் இடமெல்லாம் அரசுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கின்றார். ஆர்.எஸ்.எஸ் கொள்கைகளைப் பிசிறின்றிப் பிரச்சாரம் செய்து வருகின்றார்! ஆளுநர் இவ்வாறு செயல்படலாமா? அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பான முறையில் ஆளுநர் ஆர்.என்.ரவியின் அத்துமீறலை ஒன்றிய அரசு வேடிக்கை பார்த்ததன் நோக்கமென்ன?

ஆளுநரின் அராஜகச் செயல்பாட்டில் இருந்து தமிழகத்தை எப்படிக் காப்பாற்றுவது?

கட்டுப்படுத்த வேண்டியவர்கள், கண்டிக்கும் பொறுப்பில் உள்ளவர்கள் மௌனம் காத்த நிலையில், மௌனத்தைக் கலைக்கவும் நீதியைப் பெறவும், தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கவும் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு அங்கீகாரம் பெறவும் நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு என்ன வழி உள்ளது?

எல்லாக் கதவுகளும் மூடப்பட்ட நிலையில், உச்ச நீதிமன்றக் கதவுகளைத் தட்டுவதைத் தவிர தமிழ்நாடு அரசுக்கு வேறு வழியில்லை.

தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாடியது, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் உச்சநீதிமன்றத்தை நாடியது தமிழ்நாடு அரசு.

வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் தெளிவாக தனது தீர்ப்பை வழங்கியது. ஆளுநர் மசோதாக்களை நிறுத்தி வைத்தது சட்டவிரோதமாகும்.

சட்டத்திற்குப் புறம்பான நிலையில் செயல்பட்டுள்ளார்.

பேரவையில் நிறைவேற்றப்பட்ட அனைத்து மசோதாக்களும், உடனடியாக அமல்படுத்திடவும் உத்தரவிட்டது.

பேரவை நிறைவேற்றிய மசோதாக்கள் குறித்து, மூன்று மாத காலத்திற்குள் தீர்வு காண வேண்டும் என்றும், அதேபோன்று குடியரசுத் தலைவரும் தனக்கு வரும் மசோதாக்கள் குறித்து மூன்று மாத காலத்திற்குள் தீர்வு காண வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் கடந்த ஏப்ரல் 8 ஆம் தேதி தீர்ப்பளித்தது.

மேலும், தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பிய நாளில் இருந்து மசோதாக்கள் அமலுக்கு வரும் என்றும் தீர்ப்பளித்தது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக சில பா.ஜ.கவினர் பெரும் கூச்சலிடுகின்றனர்.

பாபர் மசூதி 1992 டிசம்பர் 6ஆம் நாள் பகிரங்கமாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

பா.ஜ.கவின் மூத்த தலைவர்கள் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி உள்ளிட்டோர் பெரும் கூட்டமாக ஆயுதங்கள் ஏந்தி அராஜகம் செய்தனர்.

பாபர் மசூதி இடித்து, தரைமட்டமாக்கப்பட்டது.

அங்கே மேற்கண்ட தலைவர்கள் புடைசூழ நடந்தது, முரளி மனோகர் ஜோசியின் தோள்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு உமா பாரதி ஆட்டம் போட்டது அனைத்தும் நேரிடையாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

அடுத்த நாள் அனைத்து நாளிதழ்களிலும் தலைப்புச் செய்தியாக வெளிவந்தன. பாபர் மசூதியை இடிக்க அவர்கள் தேர்ந்தெடுத்த நாள் டிசம்பர் 6, ஆம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்த சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளாகும்.

அவரது நினைவு நாளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நாளில்தான், மசூதி இடிப்பு பயங்கரத்தை பா.ஜ.க. குண்டர்கள் மேற்கொண்டனர்.

அவர்கள் இடித்தது மசூதியை அல்ல மாறாக நாட்டின் மதச்சார்பின்மை கொள்கையை இடித்துத் தள்ளிவிட்டார்கள்.

சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டார்கள்.

இத்தகைய வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று தீர்ப்பும் வழங்கப்பட்டது.

1. பாபர் மசூதியை இடித்தது சட்ட விரோதச் செயல்.

2. இடித்த இடத்திலேயே ராமர் கோவில் கட்ட அனுமதி.

3. மசூதியை வேறொரு இடத்தில் கட்டிக் கொள்ள வேண்டும்.

4. மசூதியை இடித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றத்தை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லை. ஆகவே அனைவரும் ஒட்டுமொத்தமாக வழக்கிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய தீர்ப்பை வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பு என்றும் தர்மம் வென்றது என்றும் வானளாவ உச்சநீதிமன்றத்தைப் புகழ்ந்து தள்ளியவர்கள் பா.ஜ.கவினர்.

இன்று உச்சநீதிமன்றத்தை வசைமாரி பொழிகின்றனர். குறிப்பாக மிக உயர் பொறுப்பில் உள்ள குடியரசு துணைத் தலைவர் உச்சநீதிமன்றத்தைச் சகட்டுமேனிக்குச் சாடியுள்ளார்.

குடியரசுத் தலைவருக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது. நாடாளுமன்றத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது.

நாடாளுமன்றத்தை விட மேலானதாக நீதிமன்றம் செயல்படுகின்றது என்றெல்லாம் குடியரசு துணைத்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# ஆர்.எஸ்.எஸ் அணியும் புதிய முகமூடிகள்!


த.லெனின்

**சாதிப் பிரிவினை அறிவியல் பூர்வமானது என்று அடித்துச் சொன்ன ஆர்.எஸ்.எஸ் இன்று தன் நிலையில் இருந்து மாறி, பேசி வருகிறது. உத்தரப்பிரதேசம் அலிகர் நகரில் நடந்த ஆர்.எஸ். எஸ் விழாவில் பங்கேற்ற மோகன் பகவத் இந்துக்கள் அனைவரும் ஒரே கோயில், ஒரே சுடுகாடு, ஒரே கிணறு என்ற கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அருள்வாக்கு அளித்துள்ளார்.**

குறிப்பாகப் பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினர் கோவில்களில், பொதுக் கிணறுகளில், சுடுகாடுகளில் அனுமதிக்க மறுப்பது இன்னும் சில இடங்களில் தொடர்கிறது என்றும் பேசியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ் ஊழியர்கள் பிளவுகளைக் கடந்து இந்துக்களின் ஒற்றுமைக்கு முயல வேண்டும் என்றும் பேசி உள்ளார். இதுதான் சாத்தான் வேதம் ஓதுவது என்பதாகும்.

மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ப இது போன்ற பச்சோந்தித்தனமான பல பேச்சுகளை வெளிப்படையாகப் பேசுவார்கள். ஆனால், நடைமுறையில் அதற்கு எதிராகவே நிற்பார்கள் இதுதான் அவருடைய சுயரூபம், கடந்த கால வரலாறு!

## ஆர்.எஸ்.எஸ் உருவான நோக்கம்

நிலப்பிரபுகள் பிராமணர்களின் ஆதிக்கங்களை உடைக்க ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களின் விளைவால் பிராமணர்கள்–நிலப்புரபுக்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ்.

மொழி வழி மாநிலம், உழுபவனுக்கே நிலம் சொந்தம், அனைவருக்கும் கல்வி, நில உச்சவரம்புச் சட்டம் ஆகியவை குறித்து இடதுசாரிகள், கம்யூனிஸ்டுகள், தேசிய இயக்கம் போராடிய போது அதற்கு எதிர்நிலை எடுத்தது ஆர்.எஸ்.எஸ்!

காலனிய காலகட்டத்தில் தொடங்கிய பிராமணரல்லாதோர் இயக்கம், படிநிலை சாதி அடிப்படையிலான ஒழுங்கை எதிர்த்துச் சமத்துவத்தையும் நீதியையும் கோரியது. அதற்காகத்தான் சமூகத்தில் உயர் அடுக்கினரை ஒருங்கிணைத்து ஆர்.எஸ்.எஸ் நாக்பூரில் உருவானது.

## சாதி உருவாக்கம் குறித்து ஆர்.எஸ்.எஸ்

மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்ட பிறகு சங் பரிவார் தலைவர்கள் இந்தச் சாதிகள் அந்நியப் படையெடுப்பாளர்களின் அட்டூழியங்களால் தோன்றியதாகவும், இந்து மதத்தில் முன்பு இருந்ததில்லை என்று கூறத் தலைப்பட்டனர்.

ஆர்.எஸ்.எஸ் தலைவர் சுரேஷ் பையாஜி ஜோஷியின் கூற்றுப்படி, இடைக்கால சகாப்தத்தில் இஸ்லாமிய அட்டூழியங்கள் தீண்டாமை தோன்ற வழிவகுத்தன, "சன்வர்வன்ஷிய க்ஷத்திரியர்களின் இந்து ஸ்வபிமான் [பெருமையை] மீறுவதற்காக, அரேபியர்களிடமிருந்து வந்த வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள், முஸ்லிம் ஆட்சியாளர்கள் மற்றும் மாட்டிறைச்சி உண்பவர்கள், பசுக்களைக் கொல்வது, தோலை உரிப்பது மற்றும் அவற்றின் சடலங்களை வெறிச்சோடிய இடங்களில் வீசுவது போன்ற அருவருப்பான வேலைகளைச் செய்ய அவர்களைக் கட்டாயப்படுத்தினர். இவ்வாறு வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள் பெருமைமிக்க இந்து கைதிகளுக்குத் தண்டனையாக இதுபோன்ற வேலைகளை வழங்குவதன் மூலம் வசீகரமான கர்மா (தோலை கையாளும்) என்ற சாதியை உருவாக்கினர்." என்று ஒரே போடாகப் போட்டுள்ளார். அப்படி என்றால் ரிக் வேதத்தில் குறிப்பிடும் நால்வருணம், புருஷ சூக்தம் ஏன் வந்தது?

## சாதிப்பிரிவினையை நியாயப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ்

ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் தத்துவம் `இந்துத்துவா'. இது நால்வர்ண சாதிய அமைப்பிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகும். ஆர்.எஸ்.எஸ் சாதி அமைப்பை



முழுமையாக நம்புகிறது. அதன் கொள்கையின் படி, ஒவ்வொரு சாதியினரும் தங்கள் சாதி வழக்கப்படி மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகளை எவரும் குறைகூறாத அளவிற்குச் செவ்வனே ஆற்றிவர வேண்டும். ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தினருக்குத் தலித்துகள் மற்றும் பழங்குடியினர் மீது எந்தக் காலத்திலும் நேசம் இருந்தது கிடையாது. மாறாக அவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கோல்வால்கர் தன்னுடைய `சிந்தனைத் கொத்துகள்' என்ற நூலில் பாகம் 2, அத்தியாயம் 10இல், `தேசமும் அதன் பிரச்சனைகளும்'என்ற தலைப்பின்கீழ், எல்லாம்வல்ல இறைவனால் உருவாக்கப்பட்டுள்ள இந்த நால்வர்ணச் சமூகம் அனைவராலும் பூஜிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்,' என்று கூறியுள்ளார். மேலும் சாதிய அமைப்புமுறை குறித்து அவர், "பழங்காலத்திலும் சாதிகள் இருந்திருக்கின்றன, நம் பிரகாசமான தேசிய வாழ்க்கையில் பல்லாயிரம் ஆண்டுகளாகவே அது தொடர்ந்திருக்கிறது. அது சமூகத்தில் பல்வேறு பிரிவினரையும் இணைப்பதில் பெரும் பங்கு வகித்திருக்கிறது," என்று சாதி அமைப்பு முறை குறித்துப் பெருமிதமாகக் குதூகலித்தார்.

## பட்டியல் இனத்திற்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்

ராமஜென்மபூமிக்கான அரசியலில் பாபர் மசூதியை இடித்த இடத்தில் ராமர் கோயில் கட்ட முதல் கல்லை ஒரு தலித்தான் நட்டார் என்று பெருமை பேசினார்கள். ஆனால், புதுதில்லியில் உள்ள வசந்த் குஞ்சில் கடந்த 2001ல் ஆர்.எஸ். எஸ் சார்பில் வேதங்கள் ஆய்வு நிறுவனம் (Institute for Vedic Studies) அமைப்பதற்கான அடிக்கல்நாட்டு விழா நடைபெற்ற போது, அங்கே குடியிருந்த 10 தலித் குடும்பங்களைச் சேர்ந்தவர்களைக் கட்டாயப்படுத்தி அப்புறப்படுத்தி விட்டார்கள். ஏனெனில், தலித்துகள் அங்கே இருந்தால் அந்தப் பகுதி தீட்டாகிவிடும் என்று அந்த விழாவை ஏற்பாடு செய்தவர்கள் நினைத்ததால்தான் இது நடந்தது. நிகழ்ச்சியில் பங்கேற்ற எல்.கே.அத்வானி உட்பட எந்த ஆர்.எஸ்.எஸ் தலைவரும் இதனை எதிர்க்கவில்லை.

முசாபர்நகரின் புர்காசி பகுதியில் தனது சொந்த சமூகத்தினர் வீடுகளுக்கு வெளியே இந்து கடவுள்களின் சுவரொட்டிகளைக் கிழித்து, அதற்குப் பதிலாக பி.ஆர்.அம்பேத்கரின் படங்களை ஒட்டியதற்காக ஒரு தலித் இளைஞரை அடையாளம் தெரியாத குண்டர்கள் கட்டைகளால் தாக்கி, "ஜெய் ஸ்ரீ ராம்" "மா காளி கி ஜெய்" மற்றும் "போலேநாத் கி ஜெய்" என்று சொல்லும்படி கட்டாயப்படுத்தியது. கேமராவில் பதிவான இந்த அடிதடியில், ஹெல்மெட் அணிந்திருந்த அந்தத் தலித் நபர் கருணைக்காகக் கெஞ்சுவது காட்டப்பட்டது.

2017 அக்டோபர் தொடக்கத்தில், குஜராத்தின் காந்திநகர் மாவட்டத்தில் உள்ள லிம்போதராய் கிராமத்தில் ஒரு இளம் தலித் மீசை வைத்திருந்ததால் தாக்கப்பட்டார். இன்னும் ஒரு இடத்தில் தனது திருமணத்தின்போது குதிரையில் ஏறி மணமகன் வந்த காரணத்தால் தாக்குதலுக்கு உள்ளான செய்தியும் வந்தது.

அன்றைய ஒன்றிய அமைச்சர் வி.கே.சிங், இரண்டு தலித் சிறுவர்கள் சன்பெத் என்னுமிடத்தில் மிகவும் கொடூரமான முறையில் உயிருடன் எரித்துக்கொல்லப்பட்ட நிகழ்வை, நாயைக் கல்லால் அடித்துக் கொல்வது போன்றதே என்று குறிப்பிட்டார். ஏன் சாட்சாத் நமது பாரத பிரதமர் கையால் மலம் அள்ளுபவர்கள் கூட அவர்கள் தொழிலில் உள்ளார்ந்த மகிழ்ச்சியை அனுபவிக்கின்றனர் என்று குறிப்பிட்டதும் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

பாஜக ஆளும் மாநிலங்களில் குறிப்பாக உத்தரப்பிரதேசத்தில் தலித்துகள் தாக்குதலுக்கு உள்ளாவதும், பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்படுவதும் தொடர்கதையாக இருக்கிறது. இன்றும் கோவில்களில் பட்டியல் சாதியினர் நுழைந்து வழிபட முடியாத சூழலில் உள்ளது.

இவ்வளவு பிரச்சனைகள் இருந்தும் இவற்றைத் தீர்க்க ஆர்.எஸ்.எஸ் எந்த நேரடிப் போராட்டங்களையும் மேற்கொள்ளவில்லை? அவர்கள் ஆழ்மனதில் என்ன இருக்கிறது என்பதை இது படம் பிடித்துக் காட்டுகிறது.

## இட ஒதுக்கீட்டுக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்

சங்க பரிவாரங்கள், குறிப்பாக ஆர்.எஸ்.எஸின் பல மூத்த தலைவர்கள் சாதி அடிப்படையிலான இடஒதுக்கீடுகளுக்கு எதிராகத் தீவிரமான நிலைப்பாட்டைக் கடந்த காலங்களில் எடுத்துள்ளனர். கடந்த 2015 ஆம் ஆண்டில், ஆர்.எஸ்.எஸ் சர்சங்கசலக் மோகன் பகவத் இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென பீகாரின் தேர்தலின் போது அழைப்பு விடுத்ததை மறக்க இயலாது.

ஆர்.எஸ்.எஸ்ஸின் ஆறு பொதுச் செயலாளர்களில் ஒருவரான மன்மோகன் வைத்யா: "எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கான இடஒதுக்கீடு வேறுபட்ட சூழலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்களுக்குச் செய்யப்பட்ட வரலாற்று அநீதியைச் சரிசெய்ய அரசியலமைப்பில் இது வழங்கப்பட்டுள்ளது. அது எங்கள் பொறுப்பு. எனவே, அவர்களுக்கான இடஒதுக்கீடு (அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து) இருந்து வருகிறது. ஆனால், அம்பேத்கர் கூட அது நிரந்தரமாகத் தொடர்வது நல்லதல்ல என்று கூறியுள்ளார். அதற்கு ஒரு காலக்கெடு இருக்க வேண்டும்." என்று பேசினார். உண்மையில் டாக்டர் அம்பேத்கர் நாடாளுமன்ற, சட்டமன்ற இடங்களுக்கான அரசியல் இட ஒதுக்கீடு குறித்து தான் ஒரு கால வரையறையைக் குறிப்பிட்டிருந்தார். கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றில் அப்படி எதுவும் குறிப்பிடப்படாத போதும் வேண்டுமென்றே திரித்துப் பேசியவர்தான் அவர். வரலாற்றுச் சூழலில் தலித்துகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இட ஒதிக்கீடு பொருந்தும் என்றால் உயர் சாதி அரிய வகை ஏழைகளுக்கு எப்படி அந்த 10% இடஒதுக்கீடு பொருந்தும்? ஆர்.எஸ்.எஸ் இதை எதிர்த்து ஏன் குரல் எழுப்பவில்லை?

## பசுந்தோல் போர்த்திய புலி

கடந்த பல ஆண்டுகளாக, ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் ஆதரவாளர்கள் மதவெறிக் கருத்துகளைப் பரப்பவும், வரையறுக்கவும் 500க்கும் மேற்பட்ட அரசு சாரா அமைப்புகளையும், சிந்தனைக் குழுக்களையும் அமைத்துள்ளனர். ஆர்.எஸ்.எஸ் பின்னணியைக் கொண்ட ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள், இராஜதந்திரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் எந்தவொரு ஆர்.எஸ்.எஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் எதிர்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளனர். ஆயினும்கூட, விமர்சனங்களுக்கு மிகவும் நெகிழ்வான முறையில் பதிலளிப்பதன் மூலம் அதன் பொதுத் தோரணையை மாற்றியமைக்கவும் முடிவு செய்துள்ளனர். அதாவது பசுந்தோல் போர்த்திய புலியைப் போல! அதனால்தான் இது போன்ற வார்த்தை ஜாலங்களை வாரி வழங்கி வருகின்றனர்.

உண்மையில் ஆர்.எஸ்.எஸ் இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கும் சமத்துவ மற்றும் மதச்சார்பற்ற கண்ணோட்டத்திற்கு எதிராகவே இருக்கிறது. அடிப்படையில் உயர்சாதியினரின் அமைப்பாகவே இது உள்ளது. இந்தப் பிற்போக்கு அமைப்பு சுதந்திரப் போராட்டத்தின் போது வெள்ளையர்களை ஆதரித்தது. இப்போதும் உலக மய நவ காலனியாதிக்கத்திற்கு ஆதரவாகவே உள்ளது. எனவே, இந்திய வகைப்பட்ட பாசிசமான அந்த நச்சுக் கருத்துக்களை எதிர்த்து முறியடிப்போம். தற்போது அறிவித்துள்ள இந்த முழக்கத்தில் தங்களுக்கு நம்பிக்கை உள்ளது என்பது உண்மையானால் ஆர்எஸ்எஸ் இன் தலைவராக ஒரு தலித்தையோ அல்லது ஒரு பிற்படுத்தப்பட்டவரையோ நியமிப்பார்களா? இந்து மத சங்கராச்சாரியார்களில் சிலரை மாற்றி ஒடுக்கப்பட்ட சமூகத்தவரை நியமிப்பார்களா?

தொடர்புக்கு: 9444481703

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 04

# சட்டப்பேரவையும் உச்ச நீதிமன்றமும் சங்கிகளின் பகடைக்காய்களா?

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கன்னா முன்பு, வஃப் திருத்தச் சட்டம் பற்றிய மனு விசாரணைக்கு வந்தபோது அவர் மூன்று கேள்விகளை எழுப்பினார்.

வஃப் வாரியத்தில் முஸ்லிம் அல்லாதவர்கள் இடம் பெறுவார்கள் எனில், இந்து அறக்கட்டளை, நிறுவனங்களில் முஸ்லிம்கள் இடம் பெற அனுமதிப்பீர்களா?

எப்போதோ உருவான வக்ஃப் சொத்துகளைப் பறிமுதல் செய்வது வரலாற்றைத் திருத்தி எழுதுவது ஆகாதா?

நூற்றாண்டுகளைக் கடந்து இருக்கிற வழிபாட்டுத் தலங்களுக்குச் சொத்துடைமை குறித்த ஆவணம் இருக்குமா? என்பது கேள்விகள்.

வழக்கு முடியும் வரைச் சட்டத்தை அமல் நடத்த மாட்டோம் என ஒன்றிய அரசு உறுதியளித்தது.

ஆர்.எஸ்.எஸ் சங்கி கும்பல்களுக்குப் பொறுக்கவில்லை. பாஜக எம்பி நிஷிகாந்த் துபே, “உள்நாட்டு யுத்தங்களுக்குத் தலைமை நீதிபதி கன்னாதான் காரணம்” எனப் பேசியது காணொளி மூலம் தீயாய்ப் பரவியது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வரும் என்பதால், ‘துபேயின் தனிப்பட்ட கருத்து. பாஜகவுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை’ என்று பாஜக தலைவர் ஜே.பி.நட்டா அறிக்கை விட்டார்.

ஆனால், எப்படியாவது உச்ச நீதிமன்றத்தின் முகத்தைச் சிதைக்க வேண்டும் என்று தீர்மானித்த ஆர்.எஸ்.எஸ் கும்பல் அடுத்த அஸ்திரத்தைக் கையில் எடுத்தது.

தமிழ்நாடு ஆளுநர், மசோதாக்களுக்கு ஒப்புதலளிக்க மறுப்பதை விசாரித்த உச்ச நீதிமன்றம், 414 பக்கங்களுக்கு நீண்ட ஒரு தீர்ப்பை வழங்கியது.

மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் காலம் வரையறை நிச்சயித்தது.

இதைக் காரணமாக்கி, குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கரை களத்தில் இறக்கி இருக்கிறது பிஜேபி.

“நீதித்துறை அதன் வரம்புகளை மீறி நாடாளுமன்ற நடவடிக்கைகளில் தலையிடுகிறது. ஒரு குடிமகன் ஜனநாயகத்தின் ஆன்மா என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் இறுதி எஜமானர்கள். நாடாளுமன்றமே உச்சபட்ச அதிகாரம் வாய்ந்தது” என்று தன்கர் கூறினார்.

“இந்தியக் குடியரசு தலைவருக்கே உங்களால் உத்தரவிட முடியுமா? அரசியல் சாசனத்தின் 142 வது பிரிவு என்பது நீதித்துறையின் கையில் உள்ள அணு ஏவுகணை பொத்தானா?” என்றும் கேள்வி எழுப்பினார்.

எம்.பி.க்களா நாட்டின் எஜமானர்கள்? மக்கள் அல்லவா? ஒரு சங்கியால் அதை ஒத்துக் கொள்ள முடியாது.

எல்லாவற்றையும் விட உயர்ந்தது அரசியல் சாசனம் தானே? அதுதான் அனைத்துச்சட்டங்களுக்கும் தாய்ச்சட்டம். நாடாளுமன்றமும் சட்டப்பேரவையும் அரசியல்சாசன உள்ளடக்கத்துக்கு எதிராகச் சட்டம் நிறைவேற்றினால் அது செல்லாது. அரசியல் சாசனத்துக்கு எதிரானதா? அது செல்லுமா? என்று சொல்வதற்காகத்தான் உச்ச, உயர் நீதிமன்றங்கள் இருக்கின்றன.

குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், ஆளுநர் எல்லாமே அரசியல் சாசனம் உருவாக்கிய பதவிகள்தான். அவர்கள் ஒன்றும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அல்லர்.

அரசியல் சாசனப் பதவியில் உள்ள ஒருவர், “நாங்கள்தான் எஜமானர்கள், எங்களை யாராலும் கேள்வி கேட்க முடியாது” என்று பேசுவதன் காரணம் அறியாமையல்ல; பாசிச ஆணவத்தின் வெளிப்பாடு.

“உச்ச நீதிமன்றம் தனது அதிகார வரம்பைப் பயன்படுத்தி, அதன் முன் நிலுவையில் உள்ள வழக்கில் முழுமையான நீதியை வழங்குவதற்குத் தேவையான ஆணையைப் பிறப்பிக்கலாம், அது இந்தியா முழுமையும் செயல்படுத்தப்பட வேண்டும்” என்று அரசியல் சாசனத்தின் 142 வது பிரிவு கூறுகிறது.

“சட்டப்பேரவை மசோதாக்களுக்குப் பதில் அளிக்காவிட்டால் அது செத்துப் போய்விட்டது என அர்த்தம்’’ என்று ஒரு ஆளுநர் ஆணவத்தோடு கொக்கரிப்பாராம்! அவ்வாறு ரத்து செய்யும் ‘வீட்டோ’ அதிகாரம் ஆளுநருக்கு இல்லை என்று உச்ச நீதிமன்றம் சொல்லக்கூடாதாம்!

குடியரசு தலைவர், துணைத் தலைவர் எல்லாம் அலங்காரப் பதவிகள். அமைச்சரவையின் வழிகாட்டுதலின்படி இயங்க வேண்டியவர்கள். அவர்களது தனிப்பட்ட கருத்தைப் பொதுவெளியில் சொல்ல உரிமை கிடையாது. இது கூடத் தெரியாதவரா தன்கர்!

தமிழ்நாடு ஆளுநர் குறித்த உச்சநீதிமன்ற தீர்ப்பை உடைத்தெறிந்து, வக்ஃப் சட்ட விசாரணையை முடக்குவது அவர்களது நோக்கம்.

எனவேதான் பத்து மசோதாக்களையும் சட்டங்களாக உச்ச நீதிமன்றம் அங்கீகரித்த பின்னும், ஊட்டியில் துணைவேந்தர் மாநாட்டைக் கூட்டுகிறார் ஆளுநர் ரவி. பங்கேற்க டெல்லியிலிருந்து பறந்து வருகிறார் தன்கர்.

தாம் தேர்ந்தெடுத்த சட்டப்பேரவை உறுப்பினர்களும், உச்சநீதிமன்றமும் சங்கிகளுக்கு வெறும் பகடைக்காய்கள்தானா? என்ற கேள்விக்கு தமிழ்நாட்டு மக்கள் 2026 ல் பதிலளிப்பார்கள்.

# பகல்காம் பயங்கரவாத தாக்குதல்: 28 பேர் உயிரிழப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம்



பகல்காம் பயங்கரவாத தாக்குதல் மோடி அரசின் தோல்வியே வெளிப்படுத்துகிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

காஷ்மீரின் முக்கிய சுற்றுலாத் தலமான பகல்காம் என்ற இடத்தில் பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இக்கொடூரச் செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

பகல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தாக்குதலில் படுகாயம் அடைந்தவர்களுக்கு ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர்கள் விரைவில் குணமடைய விழைகிறது.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரழந்தவர்களின் குடும்பத்திற்கு உரிய இழப்பீட்டை ஒன்றிய அரசு வழங்கிட வேண்டும்.

காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சைக்குத் தேவையான அனைத்து மருத்துவ உதவிகளையும் ஒன்றிய அரசு செய்து கொடுத்திட வேண்டும். அவர்களுக்கு உரிய நிவாரணத் தொகையையும் வழங்கிட வேண்டும்.

இந்திய அரசின் உளவுத்துறை மோடி ஆட்சியில் செயலிழந்து விட்டது.

இக்கொடூர நிகழ்விற்கு ஜம்மு காஷ்மீர் தொடர்பான ஒன்றிய அரசின் தவறான கொள்கையும், செயல்பாடுகளுமே அடிப்படைக் காரணம்.

இப்பயங்கரவாத தாக்குதலுக்கு ஒன்றிய அரசு தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும்.

இந்தத் தாக்குதலின் பொழுது சுற்றுலா பயணிகளைக் காப்பதில் குதிரை ஏற்ற பயிற்சியாளர் சையத் அடில் ஹுசைன் ஷா என்பவர் மிகப் பெரும் பங்களிப்பைச் செலுத்தியுள்ளார். பலரைக் காப்பாற்றியுள்ளார். ஒரு பெண்ணைக் காப்பாற்றும் முயற்சியில் தன்னுடைய உயிரை இழத்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு அவருடைய இந்த வீர தீரச் செயலை மனமார பாராட்டுகிறது.

அவரது குடும்பத்தினருக்கும் உரிய நிவாரணத் தொகையை ஒன்றிய அரசு வழங்கிட வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மேலும் இந்திய அரசியல் போக்குகளைக் குறித்த அறிக்கையை அவர் முன் வைத்தார். இதன் மீதான விவாதத்தில் தேசியக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். நிறைவாக, திருத்தங்களோடு ஏற்கப்பட்டது.

சண்டிகர் நகரில் வரும் செப்டம்பர் மாதம் நடக்கவுள்ள 26வது கட்சிப் பேராயத்துக்கான ஆயத்தப் பணிகள் குறித்து, பஞ்சாப் மாநிலச் செயலாளர் பந்த்சிங் பிரார் விளக்கிக் கூறினார்.

பேராயத்துக்கு, மாநில மாநாடுகளிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கையை, ஏப்ரல் 23ம் நாள் கூடிய தேசிய நிர்வாகக் குழு பரிந்துரைத்தது. உறுப்பினர் விகிதாசாரப்படியும், உச்சபட்ச, குறைந்தபட்சப் பிரதிநிதி எண்ணிக்கையையும் கணக்கிட்டு, ராமகிருஷ்ண பாண்டா முன் மொழிந்ததைத் தேசியக் குழு ஏற்றது.

கட்சிப் பேராயத்தில் வைக்கப்பட வேண்டிய அரசியல் தீர்மானத்துக்கான அடிப்படைகள் குறித்த முன்மொழிவு மீது, தேசியக் குழு உறுப்பினர்கள் தமது கருத்துகளைத் தெரிவித்தனர்.

மாநில மாநாடுகளின் தேதிகளை உறுதி செய்து, அவற்றில் தலைமையின் சார்பில் பங்கேற்க வேண்டிய செயற்குழு, நிர்வாகக் குழு உறுப்பினர் பட்டியலைக் கூட்டம் இறுதிப்படுத்தியது.




**தேசியக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.**

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

தலைவர் திரு ஜெகதீப் தன்கர் குறிப்பிட்டுள்ளார். உச்சநீதிமன்ற தீர்ப்பையும் அவர் கடுமையாக விமர்சித்து உள்ளார்.

மசோதாக்கள் பல ஆண்டுகளாகக் கிடப்பில் கிடந்தது குறித்து அவருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் கவலை இல்லை. குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்ட மசோதாக்கள் கிடப்பில் போடப்பட்டது குறித்தும் இவர்களுக்குக் கவலை இல்லை.

தமிழ்நாடு ஒட்டுமொத்தமாக முடங்கிப் போக வேண்டும் என்பதே இவர்களின் விருப்பம்.

இவர்களின் விருப்பங்களுக்கு மாறாக நீதிமன்றம் அளித்திட்ட தீர்ப்பை இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் தாலி அறுக்க வேண்டும் என்பதே தன்கரின் விருப்பமாக உள்ளது.

ஆதலால் தான் நொய்யரிசி போன்று கொதிக்கிறார்கள், கொந்தளிக்கின்றார்கள்.

இப்படிப்பட்டவர்களின் கொடிய சிந்தனைகள் நாட்டை ஒற்றுமைப்படுத்துமா? வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லுமா? அல்லது அழிவை நோக்கி இட்டுச் செல்லுமா? என்பது குறித்து, நாட்டின் மீது அக்கறை உள்ளோர் சிந்திக்கட்டும்!

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# துணைவேந்தர்களை அழைத்து வெட்டி வேலை பார்க்கும் வேந்தர் ரவி



மே.து.ரா.

**தமிழகப் பல்கலைக்கழகங்கள் தொடர்பான திருத்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வந்த பின்னரும், வேந்தராக ஆளுநர் (இசைப் பல்கலைக்கழகம் தவிர்த்து) நீடிக்கிறார் என்பது உண்மைதான். துணைவேந்தர்களைப் பணியமர்த்தும் மற்றும் பணி நீக்கும் பொறுப்புகள் மட்டுமே மாநில அரசுக்கு மாற்றப்பட்டுள்ளன.**

இந்த நிலையில், உதகமண்டலத்தில் துணைவேந்தர்களின் மாநாட்டினை ஆளுநர் நடத்துவதும், அதற்குக் குடியரசுத் துணைத் தலைவரை அழைத்திருப்பதும் பேசு பொருளாகியுள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் உள்ளிட்டோர் இதனைக் கண்டித்துள்ளனர். மேலும், மாநிலம் தழுவிய போராட்டங்களுக்கும் கட்சி அழைப்பு விடுத்திருக்கிறது.

குறிப்பாக, சில நாள்களுக்கு முன்னர்தான் தமிழக முதல்வர் தலைமையில் துணைவேந்தர் மற்றும் பதிவாளர் கூட்டம் நடந்து முடிந்திருக்கிறது.

உதகையில் நடைபெறுகின்ற துணைவேந்தர்கள் மாநாட்டினை வேந்தர் என்கின்ற நிலையிலிருந்து ஆளுநர் ரவி ஏற்பாடு செய்திருக்க இயலாது. ஏனென்றால், இந்த நிகழ்வுக்கு அவர் வேந்தராக இருக்கின்ற பல்கலைக்கழகங்கள் அல்லாது, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் திருவாரூர் நடுவண் பல்கலைக்கழகம் மற்றும் அவர் வேந்தராக இல்லாத தமிழ்நாட்டில் உள்ள பிற தனியார் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்கின்ற நிலையில் அல்லாது, ஆளுநர் என்ற அளவிலேயே அவர் இந்த மாநாட்டினைக் கூட்டியிருக்க முடியும்.

தமிழக முதலமைச்சர் நடத்தியதற்கு எதிராக அல்லது போட்டியாக துணைவேந்தர் மாநாட்டினை ஆளுநர் நடத்தவில்லை என்றும் ஆண்டுதோறும் இது நடத்தப்படுவதுதான் என்றும் விளக்கங்கள் தரப்படுகின்றன. மேலும், முதல்வரின் கூட்டத்துக்கு முன்னரே ஆளுநர் நடத்தும் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன என்றும் கூறப்படுகிறது.

பல்கலைக்கழகங்களின் வேந்தராக இன்னும் ஆளுநரே தொடர்வதால் அவரிடம்தான் பல்கலைக்கழகம் தொடர்பான அனைத்துப் பொறுப்புகளும் நீடிக்கின்றன என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

1. பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநர் நீடிக்கிறார்
2. பல்கலைக்கழகப் பணிகள் தொடர்பான விவரங்களைக் கேட்டறியும் உரிமை வேந்தரிடம் இருக்கிறது
3. பல்கலைக்கழகங்களின் மேல் நடவடிக்கை எடுக்க அவரால் முடியும்
4. பல்கலைக்கழகங்களில் ஆட்சிக் குழுவுக்கு மூன்று உறுப்பினர்களை அமர்த்துகின்ற வாய்ப்பு அவருக்கு இருக்கிறது
5. பட்டமளிப்பு விழாப் போன்ற நிகழ்வுகளை வேந்தரது தலைமையில்தான் நடத்தமுடியும்

என்பவற்றை ஆளுநர் தரப்பினரும் பாரதிய சனதாக் கட்சியினரும் முன்னிறுத்த முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த உரிமைகள் அல்லது கடமைகள், பல்கலைக்கழகங்களைக் கட்டுபடுத்தத் தக்க அளவிலான மேனிலையினை உருவாக்கித் தரவில்லை. ஒரு பல்கலைக்கழகத்தின் மேல் ஆளுநர் நடவடிக்கை எடுப்பது அவ்வளவு எளிதன்று. மாநில அரசின் ஒப்புதல் அல்லது ஒத்துழைப்பு இல்லாமல் ஆளுநராகச் செயல்பட இதில் எதுவுமில்லை.

துணைவேந்தர் தேர்வு, பணி நீட்டிப்பு என்ற வாளினை வைத்துக்கொண்டுதான், வாலாட்டிக்கொண்டிருந்தார் ஆளுநர். இப்போது அதுவும் பிடுங்கப்பட்டுவிட்டது.

மாநில ஆளுநர் என்ற வகையில் தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளில் பொறுப்பில்லாத மாநிலத் தலைமையாக எப்படி ஆளுநர் விளங்குகிறாரோ, அதைப் போன்றுதான் பல்கலைக்கழகங்களைப் பொறுத்து வேந்தர் நிலையும் என்பதை நாம் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்.

மாநிலத்தின் ஆளுநர் என்ற கடமைப் பொறுப்பில் இருப்பதால் மட்டுமே அவர் தனது அலுவல்நிலை சார்ந்து பல்கலைக்கழகங்களின் வேந்தராகக் கருதப்படுகிறார். எனவே, அமைச்சரவையின் அறிவுரையினைப் பெற்றுதான் வேந்தர் செயல்படவேண்டும் என்ற நடைமுறை விடுதலைக்குப் பின்னர் பல்லாண்டுகளாக நீடித்து வந்தது.

ஒன்றிய அரசின் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத கட்சியொன்று மாநில ஆட்சியில் அமர்ந்த பிறகுதான் நிலைமைகள் மாறின. வேந்தர் என்ற முறையில் பல்கலைக்கழகங்களின் அனைத்துச் செயல்பாடுகளிலும் ஆளுநர்களின் அத்துமீறல்கள் தொடங்கின.

அரசியல் கட்சி அல்லது கட்சிகள்தாம் மாநில ஆட்சியின் பொறுப்பில் இருக்கின்றன. ஒன்றிய அரசின் கட்சியைச் சார்ந்தவர்தான் மாநில ஆளுநராகப் பணியேற்கிறார். இந்த உண்மை நிலையினைப் புரிந்துகொள்ளாத உச்ச நீதிமன்றமும் உயர்நீதிமன்றங்களும் பல்கலைக்கழக வேந்தர்களாக இருக்கும் ஆளுநர்களுக்குத் தனி உரிமை இருப்பது போன்ற ஒரு நிலையினை உறுதிப்படுத்திவிட்டன.

மாநில அரசு கட்சி நலன் சார்ந்த முடிவுகளைத்தான் எடுக்கும் என்றும், ஆளுநர் நடுநிலையோடு முடிவுகளை எடுக்க முடியும் என்றும் நீதிமன்றங்கள் கருதிவிட்டன. தான் சார்ந்த கட்சி நலன்களுக்கு ஏற்பவே ஆளுநரும் செயல்படுவார் என்ற உண்மை நடைமுறை நிலை நீதிமன்றங்களுக்குப் புரியவில்லை என்பதாகத் தெரிகிறது.

இப்படித்தான் பல்கலைக்கழக வேந்தர்களாகக் கருதப்படும் ஆளுநர்கள், தங்கள் அத்துமீறல்களை நீடித்து வந்தனர்.


கேரள ஆளுநராக இருந்த அரிப் முகமது கான் ஆடிய ஆட்டங்கள் எண்ணிக்கையில் அடங்கா. மேற்கு வங்க ஆளுநராக இருந்த, இப்போதைய குடியரசுத் துணைத் தலைவர் சகதீப் தன்கர், மாநில அரசுக்கு எதிரான நிறுவனங்களாகவே பல்கலைக்கழகங்களை மாற்றியிருந்தார். இவற்றுக்கெல்லாம் நீதிமன்றங்களும் ஏதோவொரு வகையில் ஒப்புதல் தந்து வந்தன.

இவற்றையேதான் தமிழ்நாட்டின் ஆளுநர் ரவி இப்பொழுது செய்து வருகிறார். ராட்ரிய சுய சேவக் அமைப்பின் பற்றாளர்களே பெரிதும் துணைவேந்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுவந்தனர். இதற்கேற்ப, மாநில அரசுக்கு எதிரான செயல்களில் ஈடுபட அவர்கள் தூண்டப்பட்டனர்.

இதில் ஒன்றுதான் அண்மைக் காலங்களில் நடத்தப்படும் துணைவேந்தர் மாநாடு அல்லது கூட்டங்கள்.

புதிய பல்கலைக்கழகத் திருத்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வந்த பின்னர் துணைவேந்தர்களின் மாநாட்டினை வேந்தர் நடத்துவதற்கான எதிர்ப்பு என்று மட்டும் இதை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. எப்பொழுதெல்லாம் வேந்தர் என்ற முறையில் ஆளுநர் துணைவேந்தர்களது கூட்டத்தை நடத்தினாரோ அப்போதெல்லாம் எதிர்க் குரல்கள் எழுந்துகொண்டுதானிருந்தன. பல்கலைக்கழக நடைமுறைகளில் எப்பொழுதெல்லாம் ஆளுநர் தலையிடுகிறாரோ அப்போதெல்லாம் மறுப்புகள் கூறப்பட்டன. இவற்றையெல்லாம் மறந்துவிடக்கூடாது.

பல்கலைக்கழகங்கள் அனைத்தும் ஒன்றிய அரசு அல்லது மாநில அரசின் துறைகள் போன்றவையாக இருக்கவில்லை. நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்களினால் தன்னாட்சி கொண்ட அமைப்புகளாக அவை



உருவாக்கப்படுபவை.

பல்கலைக்கழகங்களின் கல்வி, நிதி, மேலாண்மை தொடர்பான அனைத்துப் பொறுப்புகளும் பல்கலைக்கழகச் சட்டங்களின் அடிப்படையில் ஆட்சிக் குழு, ஆட்சிப் பேரவை, கல்விக் குழு, பாடத் திட்டக் குழுக்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டினால் மட்டுமே செயல்படுத்தக்கூடியனவாக இருக்கின்றன. இவற்றில் நேரடியாகத் தலையிட ஒன்றிய, மாநில அரசுகளுக்கோ ஆளுநர், அமைச்சர்களுக்கோ வாய்ப்புகள் இருப்பதில்லை.

துணைவேந்தர் கூட்டத்தில் கல்வி, நிதி, மேலாண்மை தொடர்பான எந்தவொரு வழிகாட்டுதலைத் தரவும் வேந்தர் என்ற முறையில் ஆளுநருக்கு வழியுமில்லை; வாய்ப்புமில்லை.

கல்வி தொடர்பான எதிர்பார்ப்புகளை அல்லது நோக்கங்களை எடுத்துக் கூற முயற்சிக்கலாம். இங்குதான் சிக்கல் எழுகிறது.

ஒரு மாநிலத்தின் வேண்டல்கள், இளைய தலைமுறையினரை உருவாக்குதல், வேலை வாய்ப்புக்கேற்ற கல்வித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் போன்ற பல அடிப்படை அறிவுறுத்தல்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் தர முடியும்.

மாநில அளவில், அரசின் உணர்வுகளுக்கு மாறாக ஆளுநர் எந்த வகையிலும் அறிவுறுத்த முடியாது.

அண்மையில் தமிழ்நாடு முதலமைச்சர் நடத்திய துணைவேந்தர் மற்றும் பதிவாளர் கூட்டத்துக்கும் ஆளுநர் நடத்துகின்ற கூட்டங்களுக்கும் முழுமையான வேறுபாடுகள் உள்ளன.

வேந்தர் பொறுப்பில் முதல்வர் இல்லை என்றாலும், அவரது அமைச்சரவையில் உயர் கல்வித் துறை அமைச்சராக இருப்பவர் பல்கலைக்கழகங்களின் இணைவேந்தராக நீடிக்கிறார். ஆசிரியர்களின் ஊதியம், பணியாளர் ஊதியம், மேலாண்மைச் செலவுகள் ஆகியவற்றுக்கான நிதியினைத் தமிழ்நாடு அரசுதான் தருகிறது. நிதி நிலை அறிக்கையில் இவற்றுக்கான ஒதுக்கீடுகளும் செய்யப்படுகின்றன. இவையல்லாமல், கட்டமைப்புப் பணிகளுக்கும் நல்கை உண்டு. வேறு பல பொருளுதவிகளையும் மாநில அரசுதான் வழங்கிவருகிறது.

நிதிச் சுமையில் தடுமாறும் பல்கலைக்கழகங்களுக்கு உதவி செய்வது குறித்துத் துணைவேந்தர் மற்றும் பதிவாளர் கூட்டத்தில் முதலமைச்சர் பேசவில்லை என்று முன்னால் முதல்வர் ஒருவர் குற்றம் சாட்டியிருக்கிறார். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் உள்ள நிதிச் சிக்கல்கள் வெவ்வாறானவை. அவற்றை முதல்வர் தலைமையிலான மாநில அரசுதான் தனித்தனியே பேசித் தீர்க்கப் போகிறது.

கொள்கை அறிவுறுத்தலுக்காக அழைக்கப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் முதல்வர் அவர்கள் பெருந்தன்மையோடு அரசினது நோக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் மட்டுமே எடுத்துக் கூறியிருப்பது பொருத்தமானதாகவே தெரிகிறது. பெரும்பாலும், கல்வி தொடர்பான நோக்கங்களை மட்டுமே மாநில அரசு முன்னெடுத்தது.

ஆனால், மாநில அரசின் நிலைப்பாட்டினை அறிந்து அதற்கேற்பச் செயல்படாமல், மாநில அரசு ஏற்றுக்கொள்ளாத புதிய கல்விக் கொள்கையைத் திணிக்கும் நோக்கோடு மட்டும் நடத்தப்படும் துணைவேந்தர் மாநாட்டினால் என்ன பயன் ஏற்படப் போகிறது என்பதுதான் தெரியவில்லை. அப்படி ஏதேனும் வலியுறுத்தப்பட்டாலும், மாநில அரசின் உணர்வுகளுக்கு அப்பால், பல்கலைக்கழக ஆட்சிக் குழு, ஆட்சிப் பேரவை, கல்விக் குழு, பாடத் திட்டக் குழு ஆகியவற்றின் நடைமுறைகளை மீறித் துணைவேந்தர்கள் செயல்படப் போவதில்லை; செயல்படவும் வாய்ப்பில்லை.

தனக்கு எந்த வகையிலும் உரிமையில்லாத இடத்தில் இருந்துகொண்டு, துணைவேந்தர்களை அழைத்துத் திருவிழா நடத்துவதெல்லாம் போட்டிக்குச் செய்வதாகவே இருக்க முடியும். அழையா விருந்தாளியின் சிறுபிள்ளைத்தனமான செயலாகவே கருதத் தக்கதாகும்.

முன்னர் நடத்தப்பட்ட கூட்டங்களாக இருந்தாலும், இனி நடக்கப்போவதாக இருந்தாலும், பல்கலைக்கழகங்களின் கல்வி, நிதி, மேலாண்மை ஆகியவற்றில் ஆளுநர் செய்யக்கூடியன எதுவும் இல்லை. இவற்றையெல்லாம் உயர்கல்வித் துறை அமைச்சரின் பரிந்துரையில் முதலமைச்சர்தான் நிறைவேற்றித் தர முடியும்.

மாநில அரசை வலியுறுத்துகின்ற அளவில் தீர்மானம் அல்லது வேண்டுதல்கூடச் செய்ய வழியற்ற நிலையில் இருக்கின்ற ஆளுநர், துணைவேந்தர் கூட்டத்தில், அவரது அத்துமீறல்களைத்தான் வெளிப்படுத்தி வருகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. குடியரசுத் துணைத் தலைவர் கலந்துகொண்டாலும், அவரும் ஆளுநரும் வழிநடத்த இத்தகைய கூட்டங்களில் எதுவுமில்லை.

வேந்தர் என்ற முறையில் அவருக்கு இருப்பதாகக் கருதப்படும் உரிமைகள் எதுவாக இருந்தாலும், அவற்றுக்கும் இந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளுக்கும் தொடர்புகள் ஏதும் இல்லவே இல்லை. அந்த உரிமைகளை அல்லது கடமைகளை வைத்துக்கொண்டு பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் வகைசெய்ய ஆளுநருக்கு வழிகள் இல்லை.

ஒரு மாநிலத்தின் ஆளுநர் அழைக்கிறார் என்கின்ற முறையில், மதிப்பளிக்கும் எண்ணத்தில் சில துணைவேந்தர்கள் கலந்துகொள்ளலாம். அவ்வளவுதான்.

ஆளுநர் என்ற அளவில் வீணே இருப்பது போல, வேந்தர் என்ற முறையிலும் ரவி என்பவர் வெட்டி வேலை செய்துகொண்டிருக்கிறார் என்பதுதான் உண்மை.

தொடர்புக்கு : 9444075561

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

படுகிறது. உலகம் முழுவதும் இந்த நிலைமை உருவாகி உள்ளது. தகவல் தொழில் நுட்பம், ஆட்டோமொபைல், கற்பித்தல், ஆய்வு கூடங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் இந்த செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களும் ரோபோக்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிற்சங்கம் இந்த இயந்திரங்களை அல்லது அறிவியல் கண்டுபிடிப்புகளை எதிர்க்கவில்லை. மாறாக அதன் விளைவுகள் தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்கு எதிராக, உரிமைகளுக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறது. எனவே முன்னிலும் தொழிலாளர்களுக்கான வேலை நேரம் தீர்மானிக்கப்படுவதில், உரிமைகள் பராமரிக்கப்படுவதற்கான குரல் வலுப்பட வேண்டியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் கோவிட் 19 பெரும் தொற்று என்ற கொள்ளை நோயைப் பயன்படுத்தி, உலக பெருமுதலாளிகள் தங்கள் செல்வ வளத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டனர். இந்த செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் மேற்படி செல்வ குவிப்பிற்கு மேலும் உதவி செய்கிறது. உலகில் உள்ள மிகப் பெரிய ஐந்து கார்ப்பரேட் நிறுவனங்கள் 50 சத செல்வங்களை கொண்டுள்ளன. 32 டிரில்லியன் டாலர்கள் வரியில்லா நாடுகளில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதேநேரம் 5 பில்லியன் (500 கோடி) மக்கள் மேலும் ஏழைகளாக மாறியுள்ளதாக விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவும் இதே பாதையில் பயணிப்பதால், 5 சதமான இந்தியர்களின் செல்வ மதிப்பு 70 சதம் அளவிலும், 50 சதம் மக்களின் செல்வமதிப்பு. மூன்று சதம் அளவிலும் உள்ளது. வறுமைக் கோட்டில் வசிப்போரில் 121 நாடுகளில் இந்தியா 111வது இடத்தில் உள்ளது. இது போல் தொழிலாளர்கள், பெண்கள் பாதுகாப்பு, கல்வி, சமூக அந்தஸ்து உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா மிகவும் கீழ் நிலையில் இருப்பதற்கு காரணம், பெரு முதலாளிகளுக்கான சலுகையும், தொழிலாளர்கள் மீதான தாக்குதலும் ஆகும்.

ஒன்றிய பாஜக அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகள் வாரி வழங்கியது போதாது என்று, உலக பெரு முதலாளிகளுக்கும் சலுகைகளை வாரி வழங்குவதை நவீன தாராளமய பொருளாதார கொள்கை என்ற பெயரில் செய்து வருகிறது. இந்த சலுகை சார் முதலாளித்துவ செயல்பாட்டின் இறுதி வடிவமாக, தொழிலாளர் சட்டத் திருத்தங்கள் அமைந்துள்ளன. 44 சட்டங்களில் 29, ஐ 4 தொகுப்புகளாக சுருக்கி இருப்பதும், இதர சட்டங்களை காலாவதி செய்ததும், அப்பட்டமான தொழிலாளர் விரோத நடவடிக்கை ஆகும். நெடிய போராட்டங்களால் விளைந்த உரிமைகள், பாஜக ஆட்சியின் சலுகை சார் முதலாளித்துவ ஆதரவு கொள்கைகளால் பறிக்கப்பட்டுள்ளது. எண்ணற்ற பாதிப்புகளை உருவாக்கும் தொழிலாளர் சட்டத் திருத்தங்கள் அமலாவதற்கு ஒரு போதும் இந்திய தொழிலாளி வர்க்கம் அனுமதிக்க கூடாது.

தொழிற்சங்கம் அமைப்பது, பதிவு செய்வது. பேச்சுவார்த்தை நடத்துவது, போராடுவது, ஆகியவற்றை சவாலுக்கு உரியதாக மாற்றிவருகிறது. அண்மையில் சாம்சங் தொழிலாளர்களின் தொழிற்சங்கம் வைக்கும் உரிமையை, மேற்படி கொள்கைகளும், மாநில அரசின் செயல்பாடும் கடுமையாக தாக்கியதை கண்டோம். நெடும் போராட்டம் மற்றும் ஜனநாயக சக்திகளின் அழுத்தம் காரணமாக தொழிற்சங்கம் பதிவு செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல தொழிற்சங்கம் அமைக்கப்பட்டதன் காரணமாக பழிவாங்கும் செயல்களுக்கு ஏராளமான தொழிலாளர்கள் ஆளாகின்றனர். வேலை நீக்கம், வேறு மாநிலங்களுக்கு இடமாறுதல் ஆகியவை சாதாரணமாக நடந்து வருகின்றன. இத்தகைய தாக்குதல்கள் அனைத்தும் முறியடிக்கப்படுவது அவசியமாகும்.

பெரு முதலாளித்துவ கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள் வேலை வாய்ப்பிலும் எதிர்மறை தாக்கங்களை உருவாக்கி வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் மிகக் குறைவான வேலை வாய்ப்பு மட்டுமே அதிகரித்து உள்ளது. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என்ற வாக்குறுதி, உலக மகா பொய் என்பதை பாஜக நிரூபித்து உள்ளது. அதேபோல் ஊதியமும் உயரவில்லை. தினக் கூலி, அவுட்சோர்சிங் உள்ளிட்ட பல்வேறு பெயர்களில் வேலை வாங்கப்படும் தொழிலாளர்கள் ஊதியம் குறைக்கப்பட்டு, பல மடங்கு லாபத்தை கார்ப்பரேட் நிறுவனங்கள் சம்பாதிக்க வழிவகை செய்யப்படுகிறது. வேலை இன்மை அல்லது சமூகப் பாதுகாப்புடன் கூடிய வேலை இல்லாமை, தொழிலாளர்களின் ஊதிய குறைப்பிற்கு உதவியாக இருக்கிறது. வேலையில் சேரும் முன்னரே தொழிலாளர் உரிமைகள் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு வருவதை, உறுதி செய்யக் கூடியதாக, தாராளமய பொருளாதார கொள்கைகள் அமலாக்கம் உள்ளது.

இந்தியாவில் 90 சதமான குடும்பங்கள் மாதம் ஒன்றுக்கு 8,334 ரூபாய் மட்டும் செலவிடக் கூடிய நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. இதை கடந்தாண்டு ஆய்வு செய்த குழுவினர் கூறி உள்ளனர். இவை வாழ்வின் தரத்தை கடுமையாக பாதிக்கும். உணவு, குடியிருப்பு, கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு அல்லாடும் நிலையை உருவாக்கும் என்ற ஆபத்தை தொழிலாளி வர்க்கம் உணர வேண்டும்.

ஒன்றிய பாஜக அரசு முன் வைத்த நிதி நிலை அறிக்கையில், கல்வி, சுகாதாரம், குடிநீர், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், திட்டப் பணியாளர்கள் ஆகிய அடிப்படை பணிகளுக்கான நிதி வெட்டி சுருக்கப்பட்டுள்ளது. இது போன்ற பிரச்சனைகள் ஏராளமாக உள்ளன. இதற்கு முக்கிய காரணமானது பாஜக அரசும். தாராளமய பொருளாதார கொள்கைகளும் ஆகும். எனவே இந்த இரண்டு தீய சக்திகளையும் எதிர்க்கும் போராட்டத்தை கடந்த காலங்களை விட மிக வலுவாக நடத்த வேண்டிய தேவை உள்ளது.

இந்தியாவை ஆட்சி செய்யும் பாஜக மற்றும் பிரதமர் மோடியின் கொள்கை, ஏகாதிபத்திய ஆதரவைக் கொண்டதாக உள்ளது. இந்தியா என்ற தற்போதைய எல்லை, நாடு ஆகியவை; மதம், மொழி, இனம் உள்ளிட்ட அடையாளங்கள் கடந்த கால போராட்டங்களால் உருவானது. அத்தகைய போராட்டம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்த போது, அதில் துளியும் பங்கெடுக்காத இயக்கம் தான் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாஜக அமைப்புகள். அதுமட்டுமல்ல விடுதலைப் போராட்டத்திற்கு துரோகம் செய்த கூட்டமாகவும் இருந்தனர். இன்றும் இந்தியாவின் தற்சார்பு, இறையாண்மை ஆகியவற்றை அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு செயல்கள் மூலம் காவு கொடுப்பதைக் காண முடியும்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற பெருமை மிகு வரலாற்றை, மத அடையாளங்கள் பெயரிலும், இன அடையாளத்தின் பெயரிலும் சீர்குலைக்கும் வேலையை பாஜக ஆட்சி செய்து வருகிறது. இந்த பின்னணியில் தான், இஸ்லாமியருக்கு எதிரான பல்வேறு தாக்குதல்கள், கொள்கைகள் பாஜகவினால் அமலாக்கப்படுகிறது. மணிப்பூரில் நடந்த கலவரம் பாஜக கொள்கை சார்ந்த ஒன்று என்பதை உணர வேண்டும். ஒன்றுபட்ட போராட்டங்களால் பெற வேண்டிய உரிமைகளை, இது போன்ற பிரிவினை முழக்கங்களாலும், வெறுப்பு அரசியலாலும் பின்னுக்கு தள்ள பாஜக பணியாற்றுகிறது.

இது போன்ற பிளவுவாத கருத்துகள் உலக அளவில் அதிகரித்து வருகிறது. வலதுசாரி கொள்கைகள் இதற்கு உடந்தையாக உள்ளன. இந்த வலதுசாரி போக்கு, முதலாளித்துவம் சந்திக்கும் நெருக்கடிகளை பின்னுக்கு தள்ளுகிறது. முதலாளித்துவம் அளிக்கும் நெருக்கடிகளை எதிர்த்த தொழிலாளி வர்க்க போராட்டங்களை சீர்குலைக்க உதவுகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை தடுக்க பயன்படுகிறது. எனவே வலதுசாரி செயல்பாடுகளுக்கு எதிரான இடதுசாரி செயல்பாடுகள் தேவைப்படுகிறது. தொழிலாளி வர்க்க போராட்டம் இதற்கு பெரும் பங்களிப்பை செய்ய முடியும். கடந்த காலங்களில் தொழிலாளி வர்க்கம் நடத்திய பெருமை மிகு போராட்ட வரலாற்றை நினைவு கூர்ந்து செயலாற்ற வேண்டி உள்ளது.

போர்கள் முதலாளித்துவ நெருக்கடியை திசை திருப்ப பயன்பட்டு வருகிறது. ஏகாதிபத்தியம் உக்ரைனை ரஷ்யாவிற்கு எதிராக பயன்படுத்தி தோல்வி அடைந்தது. ஆனால் இஸ்ரேலின் பாலஸ்தீன ஆக்கிரமிப்பு செயல்களுக்கு உடந்தையாக இருந்து, 50 ஆயிரம் பாலஸ்தீனர்களை கொன்றழிக்க உதவி உள்ளது. இது போல் உலக அளவில் ஆக்கிரமிப்பையும், ஆதிக்கத்தையும் நிலைநாட்ட ஏகாதிபத்தியம் விரும்புகிறது.

ஏகாதிபத்திய அமெரிக்காவில் டிரம்ப் பெற்றுள்ள வெற்றியும், அதைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வரும் வர்த்தகப் போரும், உலக நாடுகளை கீழ்த்தரமாக நடத்தும் நோக்கம் கொண்டது ஆகும். சீனா அளவிற்கு பிற நாடுகள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை. இந்தியா ஏகாதிபத்திய ஆதரவு நிலை எடுத்து செயல்பட்டு வருவதால், மௌனமாக டிரம்ப் அரசின் செயல்பாடுகளை வேடிக்கை பார்க்கிறது.

அமெரிக்கா தன் நாட்டில் சட்ட விரோதமாக குடியிருப்போர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நாடு கடத்தி வருகிறது. இந்தியர்களை கிரிமினல் குற்றவாளிகளைப் போல் அமெரிக்கா நடத்தியதை இந்தியா கண்டிக்கக்கூட இல்லை. அந்த சமயத்தில் அமெரிக்காவிற்கு பயணம்

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

## 2025 மே தின விழாவில் பங்கேற்கும் தலைவர்கள்

| எண் | மாவட்டம் | ஏஐடியூசி | சிஐடியு |
|---|---|---|---|
| 1 | வடசென்னை | இ.அருணாசலம் | ஏ.கே.பத்மநாபன் |
| 2 | மத்திய சென்னை | வகிதா நிஜாம் | கே.பாலகிருஷ்ணன் |
| 3 | தென்சென்னை | சி.ஸ்ரீகுமார் | டி.கே.ரெங்கராஜன் |
| 4 | காஞ்சிபுரம் | ஜி.மஞ்சுளா | அ.சவுந்தரராசன் |
| 5 | செங்கல்பட்டு | எஸ்.காசி விஸ்வநாதன் | ஏ.வி.சிங்காரவேலன் |
| 6 | திருவள்ளூர் | ஆ.பாஸ்கர் | கே.சி.கோபிகுமார் |
| 7 | வேலூர் | டி.எம்.மூர்த்தி | எஸ். கே. மகேந்திரன் |
| 8 | திருப்பத்தூர் | எம்.இலகுமையா | சி. நாகராஜன் |
| 9 | ராணிப்பேட்டை | | டி. ஜெய்சங்கர் |
| 10 | திருவண்ணாமலை | பி.எஸ்.மாசிலாமணி | கே.திருச்செல்வன் |
| 11 | விழுப்புரம் | டாக்டர் ஏ.ஆர்.சாந்தி | எம். தனலட்சுமி |
| 12 | கள்ளக்குறிச்சி | மு.வீரபாண்டியன் | இ.முத்துக்குமார் |
| 13 | கடலூர் | இ.தினேஷ் பொன்னையா | வி.குமார் |
| 14 | நாகை | கோ.பழனிச்சாமி EX.MLA | பெ.சண்முகம் |
| 15 | மயிலாடுதுறை | மு.அ.பாரதி | நாகை மாலி, எம்.எல்.ஏ |
| 16 | திருவாரூர் | வை.செல்வராஜ் எம்.பி. | எம்.சின்னதுரை, எம்.எல்.ஏ |
| 17 | தஞ்சாவூர் | திருச்சி எம்.செல்வராஜ் | மாலதி சிட்டிபாபு |
| 18 | புதுக்கோட்டை | சி.சந்திரகுமார் | ஜி.சுகுமாறன் |
| 19 | அரியலூர் | க.மாரிமுத்து எம்.எல்.ஏ. | எம்.ஐடாஹெலன் |
| 20 | பெரம்பலூர் | பி.பத்மாவதி EX.MLA | கே.சுவாமிநாதன் |
| 21 | திருச்சி மாநகர் | கே.நடராஜன் | கே.பாலபாரதி |
| 22 | திருச்சி புறநகர் | | ஆர்.கருமலையான் |
| 23 | சிவகங்கை | அ.பாஸ்கர் | ஆர்.சச்சிதானந்தம் எம்.பி. |
| 24 | ராமநாதபுரம் | என்.செல்வராஜ் | எம்.மகாலட்சுமி |
| 25 | தூத்துக்குடி | ஆர். தில்லைவனம் | ஆர்.சிங்காரவேலு |
| 26 | கன்னியாகுமரி | க.பாரதி | கே.சாமுவேல்ராஜ் |
| 27 | தென்காசி | ஆர்.ரெங்கன் | வீ. அமிர்தலிங்கம் |
| 28 | திருநெல்வேலி | த.அறம் | சு.வெங்கடேசன் எம்.பி. |
| 29 | விருதுநகர் | டி.ராமசாமி EX.MLA | எஸ்.ராஜேந்திரன் |
| 30 | மதுரை மாநகர் | எம்.கண்ணகி | எஸ்.கண்ணன் |
| 31 | மதுரை புறநகர் | | ஆர்.எஸ்.செண்பகம் |
| 32 | தேனி | எம்.ரவி | பி.சிங்காரம் |
| 33 | திண்டுக்கல் | டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் | உ.வாசுகி |
| 34 | கரூர் | ஆர்.துரைசாமி | டி.குமார் |
| 35 | நாமக்கல் | எஸ்.சின்னச்சாமி | டி.ரவீந்திரன் |
| 36 | சேலம் | இரா.முத்தரசன் | எம்.சந்திரன் |
| 37 | ஈரோடு | நா.பெரியசாமி EX.MLA | சாமி நடராஜன் |
| 38 | திருப்பூர் | கே.சுப்பராயன் எம்.பி. | கே.ஆறுமுகநயினார் |
| 39 | கோவை | எம்.ஆறுமுகம் EX.MLA | என்.குணசேகரன் |
| 40 | நீலகிரி | பா.தினேஷ் | டி. உதயகுமார் |
| 41 | தருமபுரி | ஆர்.ஆறுமுகம் | ஆ. கிருஷ்ணமூர்த்தி |
| 42 | கிருஷ்ணகிரி | டி,ராமச்சந்திரன் எம்எல்ஏ. | கே. விஜயன் |
| 43 | புதுச்சேரி | ம.இராதாகிருஷ்ணன் | பி. கருப்பையன் |



### தலித் மாணவர்கள் மீதான சாதியத் தாக்குதலைத் தடுத்து நிறுத்த

## ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் அமைச்சரிடம் நேரில் வலியுறுத்தல்



தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. பின்னர் அவரிடம், தென் மாவட்டங்களில் நடக்கும் மாணவர்கள் இடையிலான சாதிய ரீதியான தாக்குதல் குறித்து விளக்கப்பட்டது. தகுந்த முன் ஏற்பாடுகள் செய்து, அதனை தடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். நீதிஅரசர் சந்துரு குழுவின் பரிந்துரையை தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கல்விக் கூடங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்றக் குழு தலைவர் டி.இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, அகில இந்திய தலித் உரிமை இயக்கத்தின் தேசியச் செயலாளர் த.லெனின், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.லதா, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர் லி.உதயகுமார், மாநிலப் பொருளாளர் ஆர்.எம்.சந்தோஷ்குமார், மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் இப்ராஹிம், வேலூர் மண்டலப் பொறுப்பாளர் மணி ஆகியோர் பங்கேற்றனர்.

## பட்டாசு தொழிலாளர் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் ஆலை மூடலைக் கைவிடுக

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை:

விருதுநகர் மாவட்டம், சிவகாசி மற்றும் அதன் சுற்று வட்டப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டாசு தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. பட்டாசு தொழிலை நம்பி நேரிடையாகவும், மறைமுகமாகவும் சுமார் 8 லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இந்தத் தொழிலில் பணியாற்றும் தொழிலாளர்கள் உயிருக்கும், சுற்றுச் சூழலுக்கும் பாதுகாப்பு கொடுக்கின்ற முறையில் விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பட்டாசு தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கும் போதே, விதிமுறைகள் செயலாக்கப்படுகிறதா என ஆய்வு செய்யப்பட்ட பின்புதான் அனுமதி வழங்கப்படுகிறது.

பட்டாசு தொழிற்சாலைகள் தொடங்கி நடைபெறும்போது, அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. விபத்தைத் தடுக்கவும், மனித உயிர்கள் பாதுகாக்கப்படவும், அதிகாரிகளால் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அப்போது விதிமீறல் கண்டுபிடிக்கப்பட்டால், உடனடியாகத் தொழிற்சாலை மூடி சீல்வைக்கப்படுகிறது. இப்படி மூடப்பட்ட தொழிற்சாலைகள் தற்போது 100க்கும் மேல் உள்ளன. இதனால் ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்து உள்ளார்கள். அவர்களுக்கு வேறு வாழ்வாதாரம் ஏதுமில்லை.

பட்டாசு ஆலைகளில் விதிமீறல் கண்டுபிடிக்கப்பட்டால் அதைச் சரி செய்ய கால அவகாசம் கொடுக்க வேண்டும். மேலும் விதி மீறலுக்குத் தண்டனைத் தொகையும் விதிக்கலாம். மாறாக உடனடியாக நூறுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்படுவது தொழிலையும், தொழிலாளர் வாழ்வையும் பாதிக்கும். எனவே, தொழிலாளர்கள், சிறு வியாபாரிகளின் நலன்களுக்காக, விதிமீறல்கள் சரிசெய்யப்பட்டதை உறுதி செய்து மூடப்பட்ட பட்டாசு தொழிற்சாலைகளைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க கிளை அமைப்புக் கூட்டங்கள்



ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின், கோவை வடக்குக் கிளை அமைப்புக் கூட்டம், ஆவாரம்பாளையத்தில் பி.முருகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அ.அசரப் அலி அமைப்பின் நோக்கம் குறித்துப் பேசினார். ஆர்.சந்திரசேகர், செல்வராஜ், சி.வெள்ளிங்கிரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.


தலைவராக எஸ்.ராஜன், துணைத் தலைவர்களாக எம்.குமாரசாமி, எம்.மகேந்திரன், செயலாளராக ஆ.சுருள்வேணி, துணைச் செயலாளர்களாக எஸ்.ஜமுனா, எம்.பிரேமா, பொருளாளராக எம்.ராமாத்தாள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்.

சூலூர் தெற்கு வட்டாரக் கிளை அமைப்புக் கூட்டம், பி.சக்திவேல் தலைமையில் நடைபெற்றது. ஆர்.கணேசன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் அ.அசரப் அலி துவக்கவுரை ஆற்றினார். கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, கட்சியின் வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், சூ.பே.நடராசு, ஜி.ஆர்.மணி வாழ்த்துரை வழங்கினர்.

தலைவராக ஆர்.கணேசன், செயலாளராக பி.சக்திவேல், பொருளாளராக ஆர்.சிவசாமி, துணைத்தலைவராக கே.எஸ்.யேசுராஜ், துணைச் செயலாளராக இ.செல்வராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## விசைத்தறி நெசவாளர்களின் கோரிக்கையில் தமிழ்நாடு அரசு தலையிட்டு தீர்வு காண்க!

### இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்தல்



விசைத்தறி நெசவாளர்களின் கூலி ஊதிய உயர்வு கோரிக்கை மீது அரசு தலையிட்டு தீர்வு காண வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தல்

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் இயங்கி வரும் விசைத்தறி நெசவாளர்கள் கூலி உயர்வு கோரிக்கைகள் மீது 11.04.2025 முதல் தொடர் உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஒன்றிய அரசின் தவறான ஜவுளிக் கொள்கையால் பெரும்பாலான விசைத்தறி உரிமையாளர்கள் குறிப்பிட்ட, ஒரு சில ஜவுளி நிறுவனங்களிடம் மூலப்பொருட்களைப் பெற்று, துணி உற்பத்தி செய்து கூலி பெறும் நெசவுக் கூடங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் பல்லாயிரம் நெசவாளர்கள் வாழ்வாதாரம் பெற்றுள்ளனர். மின் கட்டணம், நிலைக்கட்டணம், அத்தியாவசிய உணவுப்பண்டங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலை உயர்வு, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வரி உயர்வு, நெசவாளர்களுக்கு வழங்க வேண்டிய கூலி போன்ற காரணங்களால் உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளன. இவைகளை கருத்தில் கொண்டு முதன்மை நிறுவனங்கள், விசைத்தறி உரிமையாளர்களுக்கு வழங்கி வரும் கூலியை உயர்த்தித் தர வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் முதன்மை நிறுவனங்கள் வழங்கி வந்த கூலியைக் குறைத்து வழங்கி எதிர்மறை அணுகுமுறையை மேற்கொண்டுள்ளன. இதனால், பல்லாயிரம் விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் இதன் சார்பு தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதித்துள்ளது. இந்தப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசும், துணி நூல் துறை அமைச்சர் நேரடியாகத் தலையிட்டுத் தீர்வு காண வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தல்.

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

மேற்கொண்ட மோடி. அதானி மீதான வழக்குகளை கைவிடக் கோரினார். ஆனால் அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்ட இந்தியர்களைப் பற்றி பேசவில்லை. சோசலிச வெனிசுலா தனது நாட்டுமக்களுக்காக விமானத்தை அனுப்பியது.

இருந்த போதும் உலகின் பல நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செயலை கண்டிக்கின்றன. உலகம் முழுவதும் பல நாடுகளின் தொழிலாளர்கள் முதலாளித்துவ நெருக்கடிக்கு எதிரான, உரிமைக்கான போராட்டத்தை தீவிரமாக நடத்தி வருகின்றனர். அதில் இந்திய தொழிலாளி வர்க்கமும் சரியான பங்களிப்பை செய்து வருகிறது. இதோ மோடி ஆட்சியின் கொள்கைகளுக்கு எதிராக வரும் மே 20 அன்று நாடு தழுவிய பொது வேலை நிறுத்த அறைகூவலை அமலாக்க அனைத்து மத்தியத் தொழிற்சங்கங்களும் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன. வேலை நிறுத்தங்கள் புதிய உரிமைகளுக்கான திறவு கோலாக வேண்டும்.

தமிழ்நாடு அரசு, நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு தொழிற்சங்கங்களின் எதிர்ப்பால் விதிகள் இறுதி செய்யவில்லை. ஒன்றிய அரசு முரட்டுத்தனமாக நான்கு தொழிலாளர் சட்டத்தொகுப்புகளை அமுலாக்கும் முயற்சிகளின் விளைவாக தமிழ்நாடு அரசின் கட்டிடம், மற்றும் உடலுழைப்பு தொழிலாளர் வாரியங்களை கபளீகரம் செய்திடும் முயற்சியை தடுத்து மாநில வாரியங்கள் தொடர்ந்து செயல்பட தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பொருளாதார ரீதியாக முன்னேறிய, தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் முதலிடத்தில் இருக்கும் வளர்ந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது; என்றாலும் எல்லா துறைகளிலும் தொழிலாளர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் கிடப்பில் போடப்படுகின்றன; அல்லது மடைமாற்றம் செய்யப்படுகின்றன

தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் தங்கள் சட்டபூர்வமான உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்ற சிந்தனையை முளையிலேயே கிள்ளி எறியும் முயற்சிகளும் அதிகரித்து வருகின்றன. தக்க தொடர் போராட்டங்களை முன்னெடுத்து முன்னேறுவோம்.

உலகத் தொழிலாளர்களின் உரிமைகளை மீட்டெடுக்க தங்கள் உயிரை அர்ப்பணித்து போரடிய தியாகிகள் தினம் மே 1 ஆகும். மே தின தியாகிகள் பெயரில் சபதம் எடுப்போம். வேலை நேரத்தை அதிகரிக்க அனுமதிக்க மாட்டோம். உழைப்பு சுரண்டலை ஒழிக்கும் சோசலிசத்திற்கான போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுப்போம் என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■



# நாகையில் ஏப்ரல் 15, 16, 17ல் பேரெழுச்

# அகில இந்திய விவசாயிகள்

**அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 30வது தேசிய மாநாடு 2025 ஏப்ரல் 15 ஆம் நாளன்று நாகப்பட்டினத்தில் தொடங்கியது. எண்திசைகளில் இருந்து திரண்டு வந்த விவசாயிகளால் நாகை மாநாடு குட்டி இந்தியாவாக காட்சியளித்தது.**

அகில இந்திய விவசாயிகள் சங்கம் 30 வது தேசிய மாநாடு நாகையில் கடந்த 15 ஆம் தேதி தொடங்கியது. மூன்று நாட்கள் நடைபெற்ற மாநாட்டின் தொடக்க நிகழ்வு அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தேசியத் தலைவர் இராஜன் கிஸ்சி சாகர் தலைமையில் தொடங்கியது.

இதில் தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கேரளா வேளாண்மைத்துறை அமைச்சர் பி.பிரசாத், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் தமிழ்நாடு, மேற்கு வங்கம், பீகார், ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், டெல்லி, ஹரியானா, குஜராத், கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா, கேரளா, உள்ளிட்ட இந்தியாவின் 30 மாநிலங்களைச் சேர்ந்த விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் 697 பேர் பங்கேற்றனர்.

மாநாட்டின் கடைசி நாளான 17ம் தேதி அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அகில இந்தியப் பொதுச் செயலாளராக ஆந்திராவைச் சேர்ந்த ராவுல வெங்கையாவும், தலைவராக மகாராஷ்டிராவைச் சேர்ந்த இராஜன் கிஸ்சி சாகரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாநாட்டின் கடைசி நாளான 17ம் தேதி நாகை காடம்பாடியில் பொதுக் கூட்டம் நடைப்பெறுவதையொட்டி நாகை அவுரித்திடலில் இருந்து பிரமாண்ட பேரணி புறப்பட்டது.

பேரணியில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொண்டர்கள் செங்கொடியை ஏந்தியவாறு அணிவகுத்து முழக்கங்களை எழுப்பியவாறு சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் பேரணியாகச் சென்று பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

பொதுக்கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அகில இந்தியப் பொதுச் செயலாளர் து.ராஜா, மாநிலச் செயலாளர் முத்தரசன், நாகை எம்.பி வை.செல்வராஜ், திருப்பூர் எம்.பி சுப்ராயன் உள்ளிட்ட விவசாயச் சங்கத் தலைவர்கள் பங்கேற்றனர்.

3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அகில இந்திய விவசாயிகள் சங்க மாநாடு ஒருங்கிணைந்த கீழ தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை பகுதியில் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற நிலையில் தற்போது இரண்டாவது முறையாக தமிழகத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

### இந்தியா மீதான அமெரிக்க வரிகள் மற்றும் விவசாய வர்த்தக அழுத்தத்திற்குக் கண்டனம்

டிரம்ப் நிர்வாகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டவை உட்பட, முந்தைய மற்றும் தற்போதைய வர்த்தகக் கொள்கைகளின் கீழ், அமெரிக்கா, எஃகு மற்றும் அலுமினியம் உள்ளிட்ட பல்வேறு இந்தியப் பொருட்களுக்கு தண்டனை வரிகளை விதித்துள்ளது, மேலும் பொதுமைப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வு முறை (GSP) இன் கீழ் இந்தியாவின் முன்னுரிமை நிலையை ரத்து செய்துள்ளது, இது இந்திய ஏற்றுமதியில் $6 பில்லியனுக்கும் அதிகமாக பாதிக்கிறது. பால், கோழி, சோளம், சோயாபீன்ஸ் மற்றும் அல்ஃபால்ஃபா உள்ளிட்ட மானிய விலையில் அமெரிக்க ஏற்றுமதிகளுக்கு தனது விவசாய சந்தைகளைத் திறக்க இந்தியா மீது அமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறது, இது இந்தியாவில் மில்லியன் கணக்கான சிறு விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது.

மரபணு மாற்றப்பட்ட (GM) பயிர்கள் மற்றும் அமெரிக்க சோயா மற்றும் மக்காச்சோளம் போன்ற வேதியியல் ரீதியாக தீவிரமான தீவனப் பொருட்களின் இறக்குமதி இந்தியாவின் முன்னெச்சரிக்கை ஒழுங்குமுறை கட்டமைப்பிற்கும் உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் உயிரியல் பாதுகாப்பு பற்றிய நீண்டகால கவலைகளுக்கும் முரணானது. உலக வர்த்தக அமைப்பு (WTO), பொது சுகாதாரம், தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற மேம்பாட்டைப் பாதுகாக்க அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் உரிய வரிகள், மானியங்கள் மற்றும் சுகாதார மற்றும் தாவர சுகாதார (SPS) நடவடிக்கைகள் மூலம் உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்தியாவின் நிஷிறி சலுகைகள் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்படுவது, ஜியோபாய் வர்த்தகத்தில் பாகுபாடு காட்டாத கொள்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மற்றும் இந்திய சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEகள்), ஜவுளி மற்றும் தோல் ஏற்றுமதியாளர்கள் மற்றும் தொழிலாளர்தீவிரத் துறைகளுக்கு விகிதாசாரத்தில் தீங்கு விளைவிக்கிறது;

1. இந்திய ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா தொடர்ந்து ஒருதலைப்பட்ச வரிகளை விதிப்பதையும், GSP போன்ற வர்த்தக விருப்பங்களை அரசியல் ரீதியாக ஆயுதமயமாக்குவதையும் இந்த அமைப்பு கடுமையாகக் கண்டிக்கிறது.

2. உணவு இறையாண்மையை ஆபத்தில் ஆழ்த்தும், உள்நாட்டு உற்பத்தியாளர்களைக் குறைக்கும் அல்லது இந்தியாவின் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத் தரங்களுக்கு முரணான பொருட்களின் இறக்குமதியை எளிதாக்கும் வகையில் இந்தியாவின் விவசாய வரி ஆட்சியை சமரசம் செய்வதற்கான எந்தவொரு வெளிப்புற அழுத்தத்தையும் நாங்கள் நிராகரிக்கிறோம்.

3. WTO விதிகள் மற்றும் தேசிய முன்னுரிமைகளுக்கு இணங்க, வரிகளை விதிக்கும், இறக்குமதித் தடைகளைப் பராமரிக்கும் மற்றும் நிவிளிகளை ஒழுங்குபடுத்தும் உரிமை உட்பட அதன் விவசாயத் துறையைப் பாதுகாக்க இந்தியாவின் இறையாண்மை உரிமையை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

4. இந்திய அரசாங்கத்தை நாங்கள் பின்வருமாறு வலியுறுத்துகிறோம்:

மரபணு மாற்றப்பட்ட உணவு மற்றும் பயிர்களை இந்தியாவிற்குள் இறக்குமதி செய்வதை அதிகரிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எதிர்க்கவும்

எந்தவொரு இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தையிலும் சமச்சீரற்ற விவசாய சலுகைகளை எதிர்ப்பதில் உறுதியாக நிற்கவும்:

GSP அல்லது அதற்கு சமமான முன்னுரிமை அணுகலை மீட்டெடுக்கக் கோருதல்;

நியாயமான, வளர்ச்சியை மையமாகக் கொண்ட உலகளாவிய வர்த்தக கட்டமைப்பை ஆதரிப்பது.

5. பலதரப்பு மற்றும் பிராந்திய கூட்டாளிகள் பாதுகாப்புவாத அழுத்தங்களை எதிர்க்கவும், சிறு உற்பத்தியாளர்கள், உணவுப் பாதுகாப்பு மற்றும் காலநிலைக்கு ஏற்ற விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கும் உள்ளடக்கிய வர்த்தக சீர்திருத்தங்களை நோக்கி செயல்படவும் நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

### பீகாரில் வரவிருக்கும் விமான நிலையத்திற்கு சுவாமி சகஜானந்த் சரஸ்வதியின் பெயரை வைக்க வேண்டும்

ஒடுக்கப்பட்டவர்களின் அதிகாரமளிப்பிற்காக தனது

## மோடி ஆட்சி அரசியல் ரீதியாக அகற்றப்பட வேண்டும்



நாகையில் நடைபெற்ற அகில இந்திய விவசாயிகள் சங்க 30வது தேசிய மாநாட்டுப் பொதுக்கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியச் செயலாளர் டி.ராஜா பேசியதாவது:

நரேந்திரமோடி எப்படிப்பட்டவர் என்பதை இன்று நாடு அறிந்துள்ளது. விவசாய இடுபொருட்கள் விலை பன்மடங்கு உயர்ந்து வருகிறது. விவசாயிகள் கடன் தொல்லைக்கு ஆளாகி உள்ளார்கள். பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் நரேந்திரமோடி ஆட்சிக்கு வந்த பின்னர் தற்கொலை செய்துள்ளார்கள்.

ஒரு காலத்தில் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது விவசாயிகள் தற்கொலை கொண்டபோது இந்தியா ஒளிர்கிறது என்று சொன்னார். தற்போது இந்தியா வளர்கிறது என்று மோடி கூறுகிறார்.

குறைந்தபட்ச ஆதரவு விலை விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்று மோடி சொன்னார். ஆனால், இதுவரை கிடைக்கவில்லை.

எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் அமைத்த குழுவின் பரிந்துரையை மோடி அரசு ஏற்கவில்லை. அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கிய மோடி அவரின் பரிந்துரைகளுக்கு சமாதிக் கட்டினார்.

மூன்று கறுப்புச் சட்டங்கள் மற்றும் GST என்பது கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளை அடிக்கலாம் ஆனால் விவசாயிகளுக்கு நன்மை கிடையாது.

இன்று அரசியல் ரீதியாக மோடி ஆட்சி அகற்றப்பட விவசாயிகள் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்

எந்த மாநிலத்திலும் பாஜக ஆட்சி அமையக் கூடாது. 2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் பாஜக அதிமுக ஆட்சி அமையும் என்று பாஜக கொக்கரித்துக் கொண்டு உள்ளது. அப்படி ஆட்சி அமைந்தால் என்ன ஆகும்?

பாஜக வை ஆட்டிவிப்பது ஆர்.எஸ்.எஸ் அமைப்புதான். மதவாத நாடாக இந்தியாவை மாற்ற ஆர்.எஸ்.எஸ் நினைத்துக்கொண்டு உள்ளது.

பல்வேறு பெயர்களில் பல அமைப்புகளை ஆர்.எஸ்.எஸ் நடத்தி வருகிறது. பாஜக ஆர். எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவு.

இந்தியா எப்பொழுதும் ஒரு மாதவாத நாடாக மாறக்கூடாது. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என்று அண்ணல் அம்பேத்கர் கூறியுள்ளார்.

அப்படி இந்தியா ஒரு மதவாத நாடாக மாறினால் அதைவிட ஒரு பேரிடர் இருக்க முடியாது என்று அண்ணல் அம்பேத்கர் கூறியுள்ளார் என டி.ராஜா பேசினார்.

◆ அகில இந்திய விவசாயிகள் சங்க
151 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.
மாசிலாமணி, எஸ்.குணசேகரன் முன்.
கே.உலகநாதன் முன்.எம்எல்ஏ, இரா.
கே.ஆர்.ஜோசப், எஸ்.பாஸ்கர், வி.சர











■ அகில இந்திய விவசாயிகள் சங்க மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட புதிய தலைவர் ராஜன் கிஸிசாகர், பொதுச் செயலாளர் ராவுல வெங்கையா.

# சியுடன் நடைபெற்ற சங்க மாநாடு

த்தின் தேசியக் குழு உறுப்பினர்களாக இதில் தமிழ்நாட்டில் இருந்து பி.எஸ். எம்எல்ஏ, எம்.இலகுமையா, த.இந்திரஜித், முல்லை, மு.மாதவன், சி.எம்.துளசிமணி, போஜி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.







வாழ்க்கையை அர்ப்பணித்த புரட்சிகர விவசாயத் தலைவர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி என AIKS இன் முதல் GS சுவாமி சகஜானந்த் சரஸ்வதியின் நினைவையும் மகத்தான பங்களிப்புகளையும் நினைவுகூர்ந்து போற்றுகிறது. நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மற்றும் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டங்களில் அவரது தலைமைத்துவம், அத்துடன் பீகார் மாகாண கிசான் சபையை நிறுவுவதில் அவரது பங்கு ஆகியவை இந்தியாவின் விவசாயிகள் இயக்கத்தின் ஒரு மூலக்கல்லாகத் தொடர்கின்றன.

பீகார் அரசும் இந்திய அரசும் பாகல்பூர், அராரியா, பூர்னியா, பிஹ்தா மற்றும் ராஜ்கிர் ஆகிய இடங்களில் புதிய விமான நிலையங்கள் முன்மொழியப்பட்டு மாநிலத்தில் விமான இணைப்பை விரிவுபடுத்தி வருகிறது. விமான நிலையங்களில் ஒன்றுக்கு சுவாமி சகஜானந்த் சரஸ்வதியின் பெயரை வைக்க வேண்டும்.

மேலும், விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் ஜனநாயக சக்திகளிடையே இந்தக் கோரிக்கைக்கு ஆதரவைத் திரட்டுவதற்காக, பொதுக் கூட்டங்கள், மனுக்கள் மற்றும் அதிகாரிகளிடம் பிரதிநிதிகள் குழுக்கள் உள்ளிட்ட ஒரு பரந்த பிரச்சாரத்தைத் தொடங்க AIKS தீர்மானிக்கிறது.

### 1972: வக்ஃப் திருத்தச் சட்டத்திற்குக் கண்டனம்

வக்ஃப் வாரியங்களின் சுயாட்சியைத் தாக்கும், சிறுபான்மை உரிமைகளை மீறும், இந்தியாவின் மதச்சார்பற்ற மற்றும் கூட்டாட்சி கட்டமைப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மத்திய அரசின் முன்மொழியப்பட்ட வக்ஃப் திருத்தச் சட்டத்தை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

“சீர்திருத்தம்“ என்று மாறுவேடமிட்டு, சமூக நலனுக்காக ஒதுக்கப்பட்ட வக்ஃப் சொத்துக்களைக் கைப்பற்றி அதானி மற்றும் அம்பானி போன்ற பெருநிறுவன நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதை இந்த சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது விவசாய நிலங்கள் முதல் காடுகள் வரை பெருநிறுவன லாபத்திற்காக பொது வளங்களை தனியார்மயமாக்கும் அரசாங்கத்தின் முறையைப் பின்பற்றுகிறது.

மத அறக்கட்டளைகளுக்கான அரசியலமைப்பு பாதுகாப்புகள் (பிரிவு 26) மற்றும் மாநில உரிமைகளை இந்தத் திருத்தச் சட்டம் மீறுகிறது. இது நிறைவேற்றப்படும்போது, குருத்வாரா மற்றும் கோயில் நிலங்கள் உட்பட பிற சமூக சொத்துக்களையும் இதேபோன்று அபகரிக்க முடியும்.

1. திருத்தச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெறுதல்

2. வக்ஃப் வாரிய சுயாட்சியைப் பாதுகாத்தல்

3. சமூக நிலங்களை பெருநிறுவனங்கள் கையகப்படுத்தக் கூடாது

இந்தத் தாக்குதலை எதிர்க்கும் அனைத்து ஜனநாயக சக்திகளுடனும் கிசான் சபா நிற்கிறது. இந்த பெருநிறுவன நில அபகரிப்பு மற்றும் அனைத்து மக்கள் விரோத கொள்கைகளுக்கும் எதிராக ஒன்றுபட்ட எதிர்ப்பைக் காட்டுவோம்.

### நக்சல் எதிர்ப்பு என்ற பெயரில் பழங்குடி மக்கள் மீதான தாக்குதல்களுக்கு கண்டனம்

சத்தீஸ்கரில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் “2026க்குள் இடதுசாரி தீவிரவாதத்தை ஒழிப்போம்“ என்ற வாக்குறுதியின் ஆதரவுடன், நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் சமீபத்திய அதிகரித்துள்ளது.

வளர்ச்சியின் பதாகையின் கீழ், மாநிலம் பழங்குடியினரின் மையப் பகுதிகளை இராணுவமயமாக்கப்பட்ட மண்டலங்களாக மாற்றியுள்ளது, நூற்றுக்கணக்கான பாதுகாப்பு முகாம்களை அமைத்துள்ளது, ட்ரோன்களை நிலைநிறுத்தியுள்ளது மற்றும் ஆபரேஷன் காகர் போன்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.

இதற்காக மனித இழப்பு பேரழிவை ஏற்படுத்துகிறது. 2024 ஆம் ஆண்டில் மட்டும், பாதுகாப்புப் படையினர் கணிசமான எண்ணிக்கையிலான மக்களைக் கொன்றனர், இது முந்தைய ஆண்டை விட அதிர்ச்சியூட்டும் வகையில் 14 மடங்கு அதிகரித்துள்ளது. கொல்லப்பட்டவர்களில் பலர் அப்பாவி ஆதிவாசிகள் என்றும், அவர்கள் தங்கள் மரணங்களை நியாயப்படுத்த கிளர்ச்சியாளர்கள் என்று முத்திரை குத்தப்பட்டதாகவும் கிராமவாசிகள் மற்றும் மனித உரிமைகள் குழுக்கள் கூறுகின்றன. பழங்குடி சமூகங்கள் இந்தப் போராட்டத்தை உயிர்வாழ்வதற்கான, தங்கள் ஜல், காடு, ஜமீன் (நீர், காடு, நிலம்) ஆகியவற்றிற்கான ஒரு போராகக் கருதுகின்றன.

இந்த சமீபத்திய தாக்குதல், எதிர்ப்புகளை மௌனமாக்குவதற்கும், பழங்குடி வளங்களை தனியாரிடம் ஒப்படைப்பதற்கும் நோக்கமாகக் கொண்ட அரசு வன்முறையின் நீண்ட வரலாற்றில் மற்றொரு அத்தியாயம் மட்டுமே. அமித் ஷாவின் 2026 காலக்கெடு அமைதியைப் பற்றி குறைவாகவும், விரைவான பெருநிறுவனக் கட்டுப்பாட்டைப் பற்றியும் தெரிகிறது. பாதுகாப்புப் படைகள் ஆதிவாசிப் பகுதிகளில் ஆழமாகச் செல்லும்போது, நிலக் கையகப்படுத்துதல், போலி மோதல்கள் மற்றும் நசுக்கப்பட்ட எதிர்ப்பு பற்றிய தகவல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

அதனால்தான் அகில இந்திய கிசான் சபா ஆபரேஷன் காகர் மற்றும் இந்த அரசாங்கத்தின் பழங்குடி உரிமைகள் மீதான தாக்குதலுக்கு எதிராக நிற்க வேண்டும். சத்தீஸ்கரில் நடப்பது மாவோயிசத்தை நசுக்குவது மட்டுமல்ல இது ‘‘வளர்ச்சி’’ என்ற பெயரில் பெருநிறுவனக் கொள்ளையை செயல்படுத்துவது பற்றியது. மேலும் அது நாம் புறக்கணிக்க முடியாத ஒரு போராட்டமாகும். எனவே, ஆதிவாசிகள் மற்றும் பிற பழங்குடி சமூகங்கள் மீது அரசு ஆதரவு அளித்த பயங்கரவாத வன்முறையை AIKS தேசிய மாநாடு கண்டிக்கிறது, மேலும், இந்திய அரசியலமைப்பின் மீது வலுவான நம்பிக்கை வைத்து, இந்திய நிர்வாகத்தை வன்முறையைக் கைவிடுமாறு வழிநடத்துகிறது.

**பாசு ஆச்சார்யா**

## அகில இந்திய விவசாயிகள் சங்கம்

### புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள்

| பொறுப்பு | பெயர் | மாநிலம் |
|---|---|---|
| தலைவர் | ராஜன் கிஷிர்சாகர் | மகாராஷ்டிரா |
| பொதுச் செயலாளர் | ரவூலா வெங்கையா | ஆந்திரா |
| துணைத் தலைவர் | தாராசிங் சித்து | ராஜஸ்தான் |
| துணைத் தலைவர் | பி.சந்தோஷ்குமார் MP | கேரளா |
| துணைத் தலைவர் | மாசிலாமணி | தமிழ்நாடு |
| துணைத் தலைவர் | ஆஷிஸ் கனுன்கோ | ஒடிசா |
| துணைத் தலைவர் | இபோபி சிங் | மணிப்பூர் |
| துணைத் தலைவர் | பல்தேவ்சிங் நிஹல்கரா | பஞ்சாப் |
| துணைத் தலைவர் | ராஜேந்திர யாதவ் | உத்தரப்பிரதேசம் |
| செயலாளர் | சத்தியன் மோகெரி | கேரளா |
| செயலாளர் | கே.டி.சிங் | ஜார்க்கண்ட் |
| செயலாளர் | பாஸ்ய பத்மா | தெலங்கானா |
| செயலாளர் | ஸ்ரீகுமார் முகர்ஜி | மேற்கு வங்கம் |
| செயலாளர் | கே.வி.வி.பிரசாத் | ஆந்திரா |
| செயலாளர் | பிரமோத் பிரபாகர் | பிகார் |
| செயலாளர் | | |
| பொருளாளர் | சித்தார் சிங் | உத்தரப்பிரதேசம் |

## தமிழகத்தின் நலன்களை பறிக்கும் ஒன்றிய அரசு

நாகையில் நடைபெற்ற அகில இந்திய விவசாயிகள் சங்க 30வது தேசிய மாநாட்டுப் பொதுக்கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேசியதாவது:

பொதுக் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் சாட்டை அடி!

தமிழகத்தின் நலனை ஒன்றிய அரசு பறிப்பதுடன் நிதி அளிப்பதில் ஒன்றிய அரசு தமிழக அரசுக்குக் கிள்ளி கொடுத்திருக்கிறது.

மகாத்மா ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை நிறுத்தி 4 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு கொடுக்க மறுக்கிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு என்ற பெயரில் தொகுதி சீரமைப்பு என்று சொல்லி தமிழகத்தின் நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முயற்சிக்கிறது.

மத்திய அரசுக்கு எதிராக அறிக்கைகள் வெளியிட்ட எடப்பாடி பழனிசாமி இன்று பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் 6 ஆம் தேதி என்னுடைய நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றார். இவ்வளவும் சொல்லிவிட்டுத் திடீரென்று அவரின் வாக்கு மாறுகிறது எதனால் என்று தெரியவில்லை.

டெல்லியில் செய்தியாளர்களிடம் சமாளித்துவிட்டு உள்துறை அமைச்சரைச் சந்தித்துவிட்டு தமிழகத்தின் பிரச்சனையை



உள்துறை அமைச்சருடன் தெரிவிக்க வந்தோம் என்று கூறினார்.

ஆனால் சென்னை வந்த அமித் ஷா பாஜக அதிமுக கூட்டணியை உறுதி செய்து அறிவிக்கிறார். ஆனால் அப்போது எடப்பாடி வாய் மூடியிருந்தார்.

ஒரு கட்சி யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைக்கலாம் அது வேறு. எடப்பாடி பழனிசாமியா? எட்டப்பர் பழனிசாமியா? எட்டப்பருக்கு மன்னிப்பு கிடையாது.

தமிழகத்தில் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் பாஜக வுடன் யார் சேர்கிறார்களோ அவர்கள் தோற்கடிக்கப் படுவார்கள் என்று கடும் விமர்சனம் செய்தார்.

# இந்தியா மீதான அமெரிக்க வரிகள் மற்றும் விவசாய வர்த்தக அழுத்தத்திற்குக் கண்டனம்

# துணைவேந்தர்கள் மாநாடு அறிவிப்பு ஆளுநர் அதிகார அத்துமீறலின் உச்சம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு சட்டப் பேரவையின் மாண்புக்கும், மரபுக்கும் தீராக்களங்கம் ஏற்படுத்தும் தரம் தாழ்ந்து செயல்பட்டு வருகிறார். அரசியலமைப்புச் சட்டரீதியாக இணை வேந்தர் பொறுப்பில் உள்ள மாநில அரசின் உயர்கல்வித்துறை அமைச்சர் பங்கேற்காத துணை வேந்தர்கள் கூட்டத்தை நடத்தி, மாநில அரசின் கொள்கைகளுக்கு எதிரான தாக்குதல் தளமாகப் பல்கலைக் கழகங்களை ஆயத்தப்படுத்தி வருகின்றார்.

இந்நிலையில் ஆளுநரின் அதிகார அத்துமீறல்களைப் பட்டியலிட்டு, அரசியலமைப்பு அதிகாரம் பெற்ற பொறுப்புக்கு ஆர்.என்.ரவி தகுதியற்றவர் என்பதற்கான ஆதாரங்கள் மற்றும் தரவுகளுடன் விரிவான புகார் மனு குடியரசுத் தலைவரின் கவனத்துக்கு நேரில் சமர்ப்பித்து, அதன் மீது நடவடிக்கை கோரப்பட்டது. குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து எந்தவிதமான தகவலும் கிடைக்கப் பெறாத நிலையில் மாநில அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியது. தமிழ்நாடு அரசின் முறையீடுகளை விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அமர்வு கடந்த 08.04.2025 ஆம் நாள் விரிவான தீர்ப்பு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றி, ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட சட்ட திருத்த மசோதாக்கள் மீது ஆளுநர் முடிவு எடுக்காமல் இருந்தது சட்டவிரோதமானது எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளது. அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 142 வழங்கியுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 200ன்படி ஆளுநர், அரசியலமைப்புச் சட்டப்படி, ஆற்ற வேண்டிய கடமைப் பொறுப்புகளை நினைவூட்டி, அதற்கான கால எல்லைகளையும் வரையறுத்துச் சுட்டிக் காட்டியுள்ளது.

ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட சட்டத்திருத்த மசோதாக்கள் அனைத்தும், அனுப்பி வைக்கப்பட்ட தேதியில் ஒப்புதல் பெறப்பட்டதாகும். அவைகள் அனைத்தும் உடனடியாக நடைமுறைக்கு வருகின்றன என்று அறிவித்துள்ளது. உச்ச நீதிமன்றம் வழியாக ஒப்புதல் பெறப்பட்ட சட்ட திருத்த மசோதாக்களில், பல்கலைக் கழகங்களின் வேந்தர் பொறுப்பில் இருந்து, ஆளுநரை நீக்கிவிட்டு, அந்தப் பொறுப்பில் மாநில முதலமைச்சரை நியமிக்க வழிவகை செய்யும் சட்டத்திருத்த மசோதாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முறையில், பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பில் நியமிக்கப்பட்ட முதலமைச்சர், கடந்த 16.04.2025 ஆம் தேதி பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் கூட்டத்தை நடத்தி, அரசின் கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தச் சூழலில் நாட்டின் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும், நடவடிக்கைகளையும் கடுமையாக விமர்சித்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

இப்போது, சட்டப்படி வேந்தர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்ட ஆளுநர், வரும் 25, 26, 27 தேதிகளில் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மூன்று நாள் மாநாடு, நீலகிரி ஆளுநர் மாளிகையில் நடைபெறும் எனவும், இந்த மாநாட்டில் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் பங்கேற்பார் என்று அறிவித்திருப்பதும் ஒரு அசாதாரண நிலையை, நெருக்கடியை உருவாக்கும் திட்டமாகத் தெரிகிறது. ஆளுநரின் அதிகார அத்துமீறல்களைத் தடுக்க வேண்டிய குடியரசுத் துணைத் தலைவர், அவருடன் இணைந்து செயலாற்றுவது அரசியலமைப்புச் சட்ட நெருக்கடியை உருவாக்கும் அரசியல் சதியா? எனச் ஆழ்ந்த சந்தேகம் எழுகிறது.

தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் கால் ஊன்ற வேண்டும் என்ற நாக்பூர் குரு பீடத்தின் சேவகர்களாகச் செயல்படும் ஆளுநர், குடியரசுத் துணைத் தலைவர் ஆகியோர் பங்கேற்கும் துணை வேந்தர்கள் மாநாட்டைப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் புறக்கணிக்க வேண்டும். ஆர்.என்.ரவியின் தொடரும் அதிகார அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்த, ஜனநாயகச் சக்திகள் ஓரணியில் திரண்டு நேரடி நடவடிக்கையில் ஈடுபட முன்வர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# குடியரசுத் துணைத் தலைவரின் வரம்பு மீறிய பேச்சுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

குடியரசுத் துணைத் தலைவரின் வரம்பு மீறிய பேச்சுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்கள் மீது அரசியலமைப்புச் சட்டத்தின் படி, முடிவு எடுக்காமல், அவைகளை கிடப்பில் போடப்பட்டு, மக்கள் நலன்களைப் புறக்கணித்து வந்தார்.

தமிழ்நாடு ஆளுநரின் அத்துமீறிய செயல்கள் தொடர்பாக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு, ஆளுநரின் அத்துமீறல்கள் மீது நியாயம் வழங்கக் கோரியது.

தமிழ்நாடு அரசின் மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம், தமிழ்நாடு ஆளுநர், சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களைக் கால எல்லையில்லாமல் கிடப்பில் போட்டது சட்ட விரோதம் என மிகத் தெளிவாகக் கூறியுள்ளது. ஆளுநர், சில மசோதாக்களைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்து விட்டு, அவரது கைகளை சானிடைசர் போட்டுத் துடைத்துக் கொண்டார்.

தமிழ்நாடு ஆளுநரின் அதிகார அத்துமீறல் குறித்து குடியரசுத் தலைவரிடம் நேரில் விரிவான புகார் மனு வழங்கப்பட்டது. ஆர்.என்.ரவி, ஆளுநர் பொறுப்புக்குத் தகுதியற்றவர் என்பதற்கான ஆதாரங்களும், தரவுகளும் வழங்கப்பட்டன. இதன்மீது குடியரசுத் தலைவர் போதுமான அக்கறை காட்டி, நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைக் குடியரசுத் துணைத் தலைவர், தனக்கு வசதியாக மறந்துவிட்டார். குடியரசுத் தலைவர் அமைதி காத்து வந்ததால், தமிழ்நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் முறையிட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதே உண்மையாகும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்ட மசோதாக்கள் நிறைவேற்றிய ஆரம்ப நிலையில் இருந்து, உச்ச நீதிமன்றம் உத்தரவு வழங்கும் வரை மசோதாக்களின் உயிர் நிலை தொடர்ந்து நீடித்து வரும் என்பதைக் கற்றறிந்த கனவான் குடியரசுத் துணைத் தலைவர் நன்கறிவார். எனினும், அவர், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனநாயகச் சக்திகள் மீதான "அணு ஏவுகணையாக" பிரயோகித்துள்ளது எனக் கூறியிருப்பது சரியல்ல. ஆளுநரின் சட்டவிரோதச் செயல்களுக்கு, குடியரசுத் தலைவர் மௌன சாட்சியாக இருந்து விடக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் குடியரசுத் தலைவரின் அரசியல் சாசனக் கடமைகளை நினைவூட்டி, அவைகளை நிறைவேற்ற கால வரம்பு நிர்ணயித்திருப்பது அரசியலமைப்புப் பாதுகாப்புக்கான அரணாகவே அமைந்திருக்கிறது என்பதைக் குடியரசுத் துணைத் தலைவர் பிடிவாதமாக நிராகரித்து விட்டு, உச்ச நீதிமன்றத்துக்கும், நீதித்துறைக்கும் எதிராகப் பேசியிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது எனக் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தலித் மாணவியை வாசலில் அமர வைத்து தேர்வு எழுதச் செய்த தனியார் பள்ளிக்கு மாதர் சம்மேளனம் கண்டனம்

பூப்பெய்த தலித் மாணவியை வாசலில் அமர வைத்து, தேர்வு எழுதச் செய்த தனியார் பள்ளிக்கு இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாநிலச் செயலாளர் மு.கண்ணகி கண்டனம் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம், கிணத்துக்கடவு அருகே உள்ள சுவாமி சிட்பவானந்தா தனியார் பள்ளியில், பூப்பெய்த தலித் மாணவியை வகுப்பறைக்குள் அனுமதிக்காமல் வாசலில் அமர வைத்துத் தேர்வு எழுத வைத்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இங்கு எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர் ஏப்ரல் 5ம் தேதி பூப்பெய்தி உள்ளார்.

இந்நிலையில், தற்போது முழு ஆண்டு தேர்வுகள் நடைபெற்று வருவதால் தேர்வு எழுதுவதற்காகப் பள்ளிக்கு வழக்கம் போல சென்றுள்ளார். ஆனால், பள்ளி நிர்வாகத்தினர் மாதவிடாயைக் காரணம் காட்டி மாணவியை வகுப்பறைக்குள் அனுமதிக்காமல், வகுப்பறையின் வாசலிலேயே அமர வைத்துத் தேர்வு எழுத வைத்துள்ளனர்.

இதனை அறிந்த மாணவியின் தாய் பள்ளி நிர்வாகத்திடம் கேட்டபோது, "இங்கு இப்படித்தான் நடக்கும், வேண்டுமென்றால் உங்கள் குழந்தையை வேறு பள்ளியில் சேர்த்துக் கொள்ளுங்கள்" எனப் பள்ளி நிர்வாகம் கூறியுள்ளது. சிறுமியின் தாய் தனது செல்போனில் பதிவு செய்த இந்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் தற்போது வெளியாகி பெரும் பேசு பொருளாகியுள்ளது.

தீண்டாமைக் குற்றம், பாவச்செயல், மனிதத்தன்மையற்ற செயல் எனப் பாடப்புத்தகத்தின் முதல் பக்கத்தில் மாணவர்களுக்காக அச்சிடப்படுகிறது. ஆனால், அதைச் சொல்லிக் கொடுப்பவர்களும் புரிந்துகொள்வது இல்லை. தங்கள் குடும்ப நிகழ்வுகளில் அதைத் தீவிரமாகக் கடைபிடிக்கின்றனர். மாணவர்களுக்கும் அதன் அவசியத்தைச் சொல்லிக் கொடுப்பதில்லை. எதையும் அறிவியல் பூர்வமாக அணுக வேண்டும் என்று கற்றுக் கொடுக்க வேண்டிய பள்ளிகளிலேயே, பூப்பெய்தலைத் தீட்டாகப் பார்க்கப்படும் சம்பவம்தான் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பூப்பெய்துவது என்பது இயற்கை நிகழ்வு. இதனைக் கூடப் புரிந்து கொள்ளாமல் பள்ளி நிர்வாகத்தினரே வகுப்பறைக்குள் சிறுமியை அனுமதிக்காமல் வாசலில் அமர வைத்துத் தேர்வு எழுத வைத்துள்ள சம்பவம் சர்ச்சைக்குள்ளாகி உள்ளது.

இத்தகைய நவீன தீண்டாமை செயலை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையாக கண்டிக்கிறது. பள்ளி நிர்வாகத்தால் மாணவிக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், தமிழ்நாடு அரசை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு மாநிலக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது என மாநிலச் செயலாளர் மு.கண்ணகி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மதுவிலக்குத் துறை மானியக் கோரிக்கை பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது

## தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் ஏஐடியூசி அறிக்கை

22.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு மதுவிலக்கு, மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், அவரது துறைக்கான மானியக் கோரிக்கையை முன்வைத்து ஒப்புதல் பெற்றுள்ளார். 2003 ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்து 21 ஆண்டுகள் பணித் தொடர்ச்சியும், திறன் தேர்ச்சியும் பெற்றுள்ள பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்குவதற்கான கருத்துரு கொள்கை அறிக்கையில் முன் வைக்கப்படவில்லை. இருபது ஆண்டுகளில் பணி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு எந்தவித உதவியும் வழங்குவதில்லை. ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்ட அறிகுறியே கொள்கைக் குறிப்பில் காணப்படவில்லை.

கடை நிர்வாகச் செலவினங்களைப் பணியாளர்கள் தலையில் சுமத்தி விட்டு, அவர்கள் எம்.ஆர்.பி.சஸ் விலையில் விற்று கொள்ளை அடிப்பது போல், சொந்தப் பணியாளர்களை அடையாளப்படுத்துவதும், ஒரு ரூபாய் கூடுதல் விலைக்கு தலா ரூ.1000 வீதம் அபதாரம் விதிப்பதும், அபதாரத் தொகைக்கு சரக்கு மற்றும் சேவை வரி வசூலிப்பது போன்ற செயல்களால் பணியாளர்களைக் கசக்கிப் பிழிந்து வரும் துயரத்துக்கும் தீர்வு காணவில்லை.


கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேரடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் வெளிப்படுத்திய ஜனநாயக உணர்வும் மதிக்கப்படவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது, தொகுப்பூதியத்தில் பத்தாண்டுகள் பணியாற்றியுள்ள அனைவரும் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும் என்பது தெரியவில்லை. முந்தைய ஆட்சியில் 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ரூ.2000 தொகுப்பூதிய உயர்வை இந்த அரசு மூன்றாண்டுகள் எதுவும் செய்யாமல் நகலெடுத்துச் செயல்படுத்தியிருப்பது பணியாளர்களுக்குப் பெருத்த ஏமாற்றமளிக்கிறது. மதுவிலக்கு துறை அமைச்சரின் அறிவிப்பு கடுமையான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசின் கவனத்துக்குச் சுட்டிக்காட்டி, பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் என்ற கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டுத் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துகிறோம். இவ்வாறு நா.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, மாநிலத் தலைவர் த.தனசேகரன் பொதுச்செயலாளர் ஆகியோர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# விசைத்தறி உரிமையாளர்கள் கூலி உயர்வுக்குத் தீர்வு காண கோரி டி.ராமச்சந்திரன் கவன ஈர்ப்பு தீர்மானம்

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் கூலிக்கு, நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள், கூலியை உயர்த்தி வழங்கக் கோரி, கடந்த 11ஆம் தேதி முதல் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஒன்றிய அரசின் தவறான ஜவுளிக் கொள்கை, ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு, மூலப்பொருள் விலை உயர்வு, நிலை கட்டணம், மின் கட்டண உயர்வால் விசைத்தறி உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். முதன்மை ஜவுளி நிறுவனங்களிடமிருந்து கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்களுக்கு,



கூலியை உயர்த்தி வழங்க, தமிழக அரசு தலையிட்டு இந்தப் பிரச்சனைக்குச் சுமூக தீர்வு காண வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், சட்டமன்ற குழு தலைவர் டி.ராமச்சந்திரன் அரசின் கவனத்தை ஈர்த்தார்.

# கீர்த்திகா மரணம் தொடர்பான வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்ற வேண்டும்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை**

தஞ்சை மாவட்டம், திருவையாறு அருகே உள்ள நடுக்காவேரி அரசமரத் தெருவைச் சேர்ந்த அய்யாவு என்பவரின் மகன் தினேஷை வழக்கு விசாரணைக்காக நடுக்காவேரி காவல் நிலைய போலீசார் அழைத்துச் சென்றனர். போலீசாரின் இந்த நடவடிக்கையைக் கண்டித்தும், அண்ணன் தினேஷை விடுவிக்கக் கோரியும் தினேஷின் தங்கைகள் மேனகா மற்றும் கீர்த்திகா நடுக்காவேரி காவல் நிலையம் முன்பு விஷம் குடித்தனர்.

இதனையடுத்து இருவரும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி என்ஜினியராக பணிபுரிந்து வரும் கீர்த்திகா கடந்த 9ம் தேதி உயிரிழந்தார். மேனகாவுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

காவல் ஆய்வாளர் சர்மிளா காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலும், கடந்த 16 ஆம் தேதி இரண்டு துணை காவல் ஆய்வாளர்கள், இரண்டு பெண் போலீசார் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஆதிதிராவிடர் ஆணைய இணை இயக்குநர் தலைமையிலான குழுவினர் கடந்த 17 ஆம் தேதி நடுக்காவேரியில் கீர்த்திகாவின் குடும்பத்தினரிடமும், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மேனகாவிடமும் விசாரணை செய்துள்ளனர். இதுதொடர்பாக, தினேஷின் சகோதரி துர்கா என்பவரால் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி, மாவட்ட துணைச்செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் தங்க.சக்கரவர்த்தி, மாவட்டக் குழு உறுப்பினர் எம்.வெங்கடேசன், நடுக்காவேரி கிளைச் செயலாளர் த.நித்தியானந்தம், கிளை நிர்வாகிகள் சங்கர், அம்பலராஜ் உள்ளிட்டோர் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சென்றனர். அங்கு சிகிச்சை பெற்று வரும் மேனகாவை சந்தித்து விவரங்களை கேட்டறிந்து ஆறுதல் கூறினர்.

பின்னர், நடுக்காவேரி அரச மரத்தடியில் நடைபெற்று வரும் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் பங்கேற்று, தங்களது ஆதரவைத் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சிபிசிஐடி போலீஸ் விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட வேண்டும் என்றும், சம்பவத்தில் தொடர்புடைய காவல் ஆய்வாளர் உள்ளிட்ட அனைத்துக் காவலர்களையும் உடனடியாகப் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

# ஆன்மீகப் பயணிகளுடன் முதுநிலை மருத்துவ மாணவர்கள் பணியாற்றுவது கட்டாயம்

**டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் கண்டனம்**

மத ரீதியான ஆன்மீகப் பயணம் செல்பவர்களுடன், முதுநிலை மருத்துவ மாணவர்கள் மூன்று மாதங்கள் பணியாற்ற கட்டாயப்படுத்துவதற்கு, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் கண்டனம்.

மத ரீதியான ஆன்மீகப் பயணம் செல்பவர்களுடன், முதுநிலை மருத்துவ மாணவர்கள் தங்கள் படிப்புக் காலத்தின் பொழுது, மூன்று மாதங்கள் மாவட்டச் சுகாதார இயக்கத்தின் கீழ் கட்டாயமாகப் பணியாற்ற வேண்டும் என்ற திட்டத்தை தேசிய மருத்துவ ஆணையம் கொண்டு வந்துள்ளது.



இந்தத் திட்டம் இளம் டாக்டர்களின் வேலை வாய்ப்பையும், மாநில உரிமையையும் பறித்து வருகிறது.

அதாவது, யமுனோத்திரி, கங்கோத்திரி, கேதார்நாத், பத்திரிநாத் போன்ற நான்கு இடங்களுக்கு ஆன்மீகப் பயணம் மேற்கொள்வோருக்கு, மருத்துவ சேவை மேற்கொண்டால் இந்த டி.ஆர்.பி (District Residential Programme) சான்றிதழ் வழங்கப்படும் என தேசிய மருத்துவ ஆணையம் அறிவித்துள்ளது. இது கடும் கண்டனத்திற்குரியது.

ஒன்றிய அரசு என்.எம்.சி சட்டம் 2019 யை இயற்றி நீட் தேர்வு, நெக்ஸ்ட் தேர்வு, டிஆர்பி போன்றவை மூலமாக மாநில அரசின் உரிமைகளைப் பறிப்பதோடு மட்டுமின்றி, இந்துத்துவா கருத்தியலை மருத்துவக் கல்வியில் திணிக்கத் திட்டமிட்டு வருகிறது.

சரகர் உறுதி மொழி திணிப்பு, தடுப்பூசி திட்டத்திற்கு "இந்திர தனுஷ் திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்தது, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பெயரை "ஆயுஷ்மான் ஆரோக்கியமந்திர்" என மாற்றம் செய்தது போன்றவை சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வை ஒரே நாளில், ஒரே முறையில், ஒரே கட்டத்தில் நடத்திட வேண்டும். பல கட்டங்களில், பல அமர்வுகளில் நடத்துவது முறைகேடுகளுக்கே வழி வகுக்கும்.

ஒன்றிய பாஜக அரசு மருத்துவக் கல்வி மற்றும் சேவையில் இந்துத்துவா கருத்தியலைத் திணிப்பதையும், இந்தி மற்றும் சமஸ்கிருதத்தைத் திணிப்பதையும் கைவிட வேண்டும். ஒன்றிய மற்றும் மாநில அரசுகள், அரசு மருத்துவமனைகளை, அதன் சேவைகளை தனியார் மயமாக்குவதைக் கைவிட வேண்டும்.

ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களையும், மருத்துவப் பணியாளர்களையும் நியமிப்பதை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும். அரசு மருத்துவர்களின் நீண்ட கால கோரிக்கையான அரசாணை எண் 354 ல் உரிய திருத்தங்களைச் செய்து ஊதிய உயர்வு மற்றும் கால முறை பதவி உயர்வு வழங்க வேண்டும்.

பயிற்சி மருத்துவர்கள், முதுநிலை மற்றும் உயர் சிறப்பு மருத்துவ மாணவர்களின் பயிற்சி கால உதவி ஊதியத்தை உயர்த்தி வழங்கிட வேண்டும்.

15 ஆண்டு முதல் 20 ஆண்டுகாலத்திற்கு மேலாகப் பணிபுரியும், அரசு ஆரம்ப சுகாதார நிலைய "நம்பிக்கை மையம்" ஆய்வக நுட்பனர், ஆற்றுநர் பணிபுரிபவர்களின் ஊதியம் நான்காண்டு காலமாக உயர்த்தப்படவில்லை. இப்பணியாளர்களுக்குப் பணி பாதுகாப்பு மற்றும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் எனக் கூறினார். அப்போது சங்கத்தின் மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி,

பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் எஸ்.தனவந்தன், தமிழ்நாடு யோகா ஆசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் வே.காசிநாதபாரதி, பாசிட்டிவ் விமன் நெட் வொர்க் அகில இந்தியத் தலைவர் பி.கௌசல்யா மற்றும் நிர்வாகிகள், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு பணியாளர்கள் சங்கத்தின் டி.ஆர்.தேன்மொழி ஆகியோர் உடன் இருந்தனர்.

# கிராம உதவியாளர்களுக்குக் காலமுறை ஊதியம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்**

கிராம உதவியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு அரசின் வருவாய் துறையில் 15 ஆயிரத்திற்கும் அதிகமான கிராம உதவியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

வருவாய்துறையில் பணியாற்றக் கூடிய அனைவருக்கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால், கிராம உதவியாளர்கள் மட்டும் சிறப்புக் காலமுறை ஊதியத்திலேயே பணியாற்றி வருகின்றனர். இதனால் அவர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இவர்கள் கடந்த 23 ஆண்டுகளாகப் பெற்று வந்த கருணை அடிப்படையிலான வாரிசு வேலை முழுமையாக நிறுத்தப்பட்டு விட்டது. இதனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஏராளமான குடும்பங்கள் பாதிக்கப்படுள்ளன.

எனவே, இவர்களது கோரிக்கையை தமிழ்நாடு அரசு ஏற்று, வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியத்தை வழங்கிட வேண்டுமென, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மின் நுகர்வோர் வீடுகளில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்**

மின் நுகர்வோர் வீடுகளில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் இணைப்பு பெற்றுள்ள நுகர்வோர் அனைவருக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்த வேண்டும் என ஒன்றிய பாஜக அரசு வற்புறுத்துவது, மின் விநியோகத்தை தனியாருக்கு தாரை வார்க்கும் நோக்கம் கொண்டது.

நாடு முழுவதும் கடும் எதிர்ப்புக்கு உள்ளான மின்சார திருத்தச் சட்டத்தை (2020) மறைமுகமாக செயல்படுத்தும் திட்டமாகும். டோடெக்ஸ் முறையில் மின் இணைப்புகளில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தினால் மின் நுகர்வோர்கள் தமிழ்நாட்டில் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். தமிழகத்தில் மூன்று கோடி ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்துவது முழுமையாக தனியாரிடம் ஒப்படைக்கப்படுவதாக கூறப்படுகிறது. இந்த ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தும் தனியார் நிறுவனமே அதன் பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்ளும் அபாயம் உள்ளது.

தற்போது மின் மீட்டர்கள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இவற்றை அகற்ற வேண்டிய நிலை ஏற்படும். இதனால் ஏற்கனவே பெரும் கடன் சுமையால் திணறி வரும் தமிழ்நாடு மின்சார வாரியம் என்ன கதிக்கு ஆளாகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள 3.40 கோடி மின் இணைப்புகளில் ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தினால் சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாய் செலவு ஏற்படும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய தொகையை அதானி, அம்பானி போன்ற பெரும் குழும நிறுவனங்கள் மட்டுமே முதலீடு செய்யும். இதன் மூலம் குழும நிறுவனங்கள் கொள்ளை லாபம் பெறுவதற்கு ஒன்றிய அரசு வழிவகை செய்கிறது.

ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தினால் மீட்டருக்கான வாடகையை தனியார் நிறுவனத்திற்கு மின்வாரியம் செலுத்தும். நாளடைவில் மீட்டர் வாடகையை நுகர்வோரே நேரடியாக செலுத்த வேண்டிய நிலை உருவாகும்.

தற்போது மின் நுகர்வு நேரத்தில் அடர்த்தியான மின்பயன்பாட்டு நேரம் (Peak Hours), சாதாரண நேரம் என வகைப்படுத்தி வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை பயன்படுத்தும் மின்சாரத்திற்கு உச்சபட்ச நேரம் என வசூல் செய்யப்பட்டு வருகிறது. இது, இனி வரும் காலங்களில் அனைத்து நுகர்வோர்களுக்கும் இந்த முறையை விரிவுபடுத்தும் திட்டமாகும்.

கொசுத் தொல்லை, அளவுக்கு மீறிய வெப்பம், காற்றோட்ட வசதி குறைவு போன்ற காரணங்களால் பெரும்பாலும் மின்சாரம் இன்றியமையாத் தேவையாகியுள்ளது. புதிய கட்டண முறை மின் கட்டணத்தை உயர்த்தும் செயலாகும்.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதன் மூலம் விவசாயிகள் இதுவரை பெற்று வரும் இலவச மின்சாரத்து மின்கட்டணம் செலுத்தும் நிலைக்கு தள்ளப்படுவார்கள். இதே முறையில் குடிசைகளுக்கு ஒரு விளக்கு திட்டத்திற்கான இலவச மின்சாரம் ரத்தாகும். கைத்தறி, நெசவு ஆகியவற்றிற்கு வழங்கி வருகின்ற மானியமும் கேள்விக்குறியாகும்.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதால் கணக்கீட்டு பிரிவு பணியாளர்கள் வேறு பணிக்கு மாற்றப்படுவதோடு மின் உற்பத்தி, பகிர்மானம், தொடரமைப்பு விநியோகம் என ஒட்டு மொத்த மின் நிர்வாகமும் அரசின் கட்டுப்பாட்டில் இருந்து, தனியார் கைகளுக்கு மாறிவிடும். சமூகநீதி இட ஒதுக்கீடு பறிபோகும். கேரள அரசு டோடெக்ஸ் முறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை தமிழ்நாடு அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, தமிழக மின்வாரியத்தில் டோடெக்ஸ் முறையில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை கேட்டுக்கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# கட்சி நூற்றாண்டு இரத்த தான முகாம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டை முன்னிட்டு, கோவை பெரியநாயக்கன்பாளையத்தில் வே.கௌதம்குமார் நினைவாக 13.04.2025 அன்று நடைபெற்ற இரத்த தான முகாமிற்கு, கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி தலைமையில், ஒன்றியச் செயலாளர் எஸ்.ராமமூர்த்தி வரவேற்றுப் பேசினார். கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் துவக்கவுரையாற்றினார். இதில், கட்சியின் மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேல், மாவட்டத் துணைச் செயலாளர் மௌ.குணசேகர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

மாவீரர்கள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் நினைவாக 20.04.2024 அன்று கோவை காட்டூரில் உள்ள ஏஜடியுசி அலுவலகத்தில் நடைபெற்ற இரத்ததான முகாமிற்கு, கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்எல்ஏ தலைமை தாங்கினார். மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேல் வரவேற்றுப் பேசினார். முகாமினை கோவை மாநகராட்சி மேயர் ஆர்.ரங்கநாயகி, திமுக கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் எக்ஸ்.எம்எல்ஏ, கோவை மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர். கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, துணைச் செயலாளர் மௌ.குணசேகர், பொருளாளர் சி.தங்கவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில், அரசு மருத்துவமனைகளுக்கு 103 யூனிட் இரத்தம் வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க
# வட மாவட்டப் பொறுப்பாளர்கள் கூட்டம்



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் வடசென்னை, தென் சென்னை, மத்திய சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டப் பொறுப்பாளர்கள் கூட்டம் எஸ்.ராமச்சந்திரன், பி.எஸ்.எல்லப்பன், தென்சென்னை சௌமியா தலைமையில், மறைமலைநகர் அலுவலகத்தில் நடைபெற்றது. அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியச் செயலாளர் த.லெனின் தேசியக் குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். மாநிலச் செயலாளர் லி.உதயகுமார் அமைப்பு நிலைக் குறித்துப் பேசினார். கட்சியின் செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் வாழ்த்தி பேசினார். மாநிலப் பொருளாளர் ஆர்.எம். சந்தோஷ் குமார், மாநிலக் குழு உறுப்பினர் டி.செண்பகம், வடசென்னை மாவட்டச் செயலாளர் ஜி.சுப்பிரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சூலூரில் கட்சி நூற்றாண்டு விழா சதுரங்கப் போட்டி



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு மற்றும் பாலதண்டாயுதம் 52ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில், கோவை மாவட்ட அளவிலான சதுரங்க விளையாட்டுப் போட்டி சூலூர் கண்ணம்பாளையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு இளைஞர் பெருமன்ற சூலூர் தெற்கு வட்டாரச் செயலாளர் கே.ஜி.பவன்குமார் தலைமை தாங்கினார். இதில், பள்ளி மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை 175 வீரர்கள் கலந்துகொண்டனர்.

மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், மாதர் சம்மேளன வட்டாரச் செயலாளர் ர.மாலதி உள்ளிட்டோர் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினர். இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் சு.பிரசாத், ஹரிஹரசுதன், க.ரோகித்குமார் உள்ளிட்டோர் போட்டிகளை முன்னின்று நடத்தினர்.

## தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க
# திருச்செங்கோடு தாலுகா பேரவை



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின், நாமக்கல் மாவட்ட திருச்செங்கோடு தாலுகா பேரவைக் கூட்டம் எஸ்.பாலதண்டாயுதம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் அமைப்பு நிலை பற்றிப் பேசினார். தாலுகா தலைவராக எஸ்.மன்னாதன், செயலாளராக டி.சுரேஷ், துணைத் தலைவராக கே.மாது, துணைச் செயலாளராக செந்தில்குமார், பொருளாளராக என்.கருணாகரன் உட்பட்ட 15 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

# உண்டியல் பணத்தைக் கட்சிக்கு நிதியாக வழங்கிய மாணவன்



தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின், ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர் செ.ராசன் - பூபதி தம்பதியரின் மகன் ஆர்.தரண் கார்த்திக் ஒன்பதாவது பிறந்தநாள் அன்று, தியாக சீலர் ஆர்.நல்லகண்ணு அவர்களிடம், தான் சேர்த்து வைத்த உண்டியல் பணத்தைக் கட்சிக்கு நிதியாக வழங்கி ஆசி பெற்றார்.

# கோவையில் இளைஞர் பெருமன்ற பெயர்ப்பலகைத் திறப்பு விழா

கோவை மாவட்டம், கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட காளப்பட்டி கிளைப் பெயர்ப்பலகை திறப்பு விழா, கிளை துவக்க விழா, வே.கௌதம்குமார் படத்திறப்பு நிகழ்வு, கிழக்கு மண்டல துணைத் தலைவர் சிகப்புச் சட்டை சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் எம்.பிரபாகரன் வரவேற்புரையாற்றினார். கிழக்கு மண்டலச் செயலாளர் எம்.மணிகண்டன் கொடியேற்றி வைத்தார். அமைப்பின் பெயர்ப்பலகையை மண்டல துணைச் செயலாளர் எம்.அபிமன் திறந்து வைத்தார்.

மறைந்த இளைஞர் பெருமன்ற மாவட்டத் தலைவர் வே.கௌதம்குமாரின் படத்தினை, மாநிலச் செயலாளர் க.பாரதி திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில், இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் கலை.அஸ்வினி, மாவட்டச் செயலாளர் மௌ.குணசேகர், துணைத் தலைவர் எம்.மணிகண்டன், துணைச் செயலாளர் ஹரிஹரசுதன், மண்டலப் பொருளாளர் காளிதாஸ், கிளைத் தலைவர் கே.யோகேஸ்வரன், கிளைப் பொருளாளர் ஏ.ஸ்ரீகாந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அனைத்துத் தொழிற்சங்க வேலை நிறுத்த ஆயத்த நெல்லை மாவட்ட மாநாடு

தொழிலாளர், விவசாய விரோதக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வரும் பிஜேபி மோடி அரசைக் கண்டித்து, அனைத்துத் தொழிற்சங்க திருநெல்வேலி மாவட்ட மாநாடு எல்.பி.எப் மாநில அமைப்புச் செயலாளர் ஏ.தர்மன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிஐடியு மாவட்டச் செயலாளர் ஆர்.முருகன், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் ஆர்.சடையப்பன், எச்எம்எஸ் மாவட்டத் தலைவர் பி.சுப்பிரமணியம், ஐஎன்டியுசி கண்ணன், ஏஐசிசிடியு மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில், பாளை சட்டமன்ற உறுப்பினர் எம்.அப்துல்வஹாப் மாநாட்டை துவக்கி வைத்தார். நெல்லை மேயர் கிட்டு எ.கிருஷ்ணன், ஏஐடியூசி ஆர்.ரங்கன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார்கள்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்கமிட்டி, கிளை மாநாடுகள்




**பல்லடம் ஒன்றியம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் புறநகர் மாவட்டம், பல்லடம் ஒன்றிய 24 வது மாநாடு, கட்சி அலுவலகத்தில், ஆர்.கணேசன், வி.பரமசிவம், ஆர்.சிவகாமி ஆகியோர் தலைமையில். மாநாட்டுக் கொடியினை ஒன்றிய முன்னாள் செயலாளர் ஆர்.சுப்பிரமணியம் ஏற்ற, கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி துவக்கி வைத்தார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் வஹிதா நிஜாம் மாநாட்டை நிறைவு செய்து பேசினார். மாநாட்டில் மாவட்ட துணைச் செயலாளர் ஜி.ரவி, மாவட்டப் பொருளாளர் வி.பி.பழனிச்சாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.நதியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் ஒன்றியச் செயலாளராக எஸ்.சாகுல் ஹமீது, துணைச் செயலாளராக கே.மூர்த்தி, பொருளாளராக கே.எல்.ரவிக்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பல்லடம் அரசு மருத்துவமனையில் நிலவும் சுகாதாரச் சீர்கேட்டை சரி செய்ய, துப்புரவுப் பணியாளர்களை அதிகப்படுத்தி சுகாதாரப் பணியை மேற்கொள்ள வேண்டும். பல்லடம் நகரம் பனைப்பாளையம் முதல் அண்ணா நகர் வரை மேம்பாலம் அமைக்க வேண்டும் என்பது உட்பட மேலும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கெடிலம் ஒன்றியம்:** கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் கெடிலம் ஒன்றியம் சார்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாடு அம்பேத்கர் பிறந்த நாள் உறுதி ஏற்புக் கூட்டமும் தாமோதரன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் லெனின் அம்பேத்கர் உருவப் படத்தினைத் திறந்து வைத்து அமைப்பைப் பற்றி விரிவாக விளக்கிப் பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.ராமசாமி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டப் பொருளாளர் மா.வெங்கடேசன் திருநாவலூர் ஒன்றியத்தில் தானியக் கிடங்குகள், அரசு கலைக் கல்லூரி, கலைஞர் கனவு இல்ல திட்டம் ஆகியவை கட்டிக் கொடு, வீட்டுமனை பட்டா இல்லாத ஏழை எளிய மக்களுக்கு உடனடியாக வீட்டுமனை பட்டா வழங்கிடு உள்ளிட்ட தீர்மானங்களை வலியுறுத்திப் பேசினார். மற்றும் புதிய நிர்வாகிகளாக ஒன்றியச் செயலாளராக ஜி.தாமோதரன் ஒன்றிய துணைச் செயலாளராக எம்.சுப்பிரமணியன், கே.மணிகண்டன், ஏ.கே.வேல்முருகன், ஒன்றியப் பொருளாளராக ஏ.செந்தில் ஒன்றியக் குழு உறுப்பினர்களாக கே.ஆனந்தன், எஸ்.பாபு, பாலகிருஷ்ணன், அங்கம்மாள், தங்க பாலையா ஆகிய 11 பேர் கொண்ட ஒன்றியக் குழு தேர்வு செய்யப்பட்டது.

**மணியகாரன்பாளையம் கிளை:** கோவை 19 வது டிவிசன் மணியகாரன்பாளையம் கிளை மாநாடு மனோராஜ் தலைமையில் நடைபெற்றது. கட்சிக் கொடியை ஏஐடியூசி மாநிலத் துணைத் தலைவர் என்.செல்வராஜ் ஏற்றி வைத்தார். இதில் கிளைச் செயலாளராக என்.ஜீவானந்தம், துணைச் செயலாளர்களாக சி.கோபால், ஆர்.காளிச்சாமி, பொருளாளராக டி.மனோராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். வடக்கு மண்டல துணைச் செயலாளர் வி.ஆர்.பாண்டியன் கலந்து கொண்டனர்.

**கிளாம்பாக்கம் கிளை:** திருவள்ளூர் தாலுகா, கிளாம்பாக்கம் கிளை மாநாட்டுக் கொடியை ஏழுமலை ஏற்றினார். இதில், கிளைச் செயலாளராக டி.துரை, துணைச்செயலாளராக முனுசாமி, பொருளாளராக ராஜ்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**மேல்நல்லாத்தூர் கிளை** மாநாட்டில் கிளைச் செயலாளராக எம்.சதீஷ்குமார், துணைச் செயலாளராக யு.பாபு, பொருளாளராக பாலு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**அதிகத்தூர் கிளை** மாநாட்டில், கிளைச் செயலாளராக டி.வெங்கடேசன், துணைச் செயலாளராக பி.கருணாகரன், எஸ்.சஞ்சய், பொருளாளராக கோவிந்தராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இதில் தாலுகா செயலாளர் வி.சரவணன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என்.எஸ்.பிரதாப் சந்திரன், பி.வி.செந்தில், மாவட்டக் குழு உறுப்பினர்கள் கே.மதியழகன், டி.வெங்கடேசன் ஆகியோர் பங்கேற்றனர்.

**செங்கோட்டை:** தென்காசி மாவட்டம் செங்கோட்டையில், கட்சி சிறப்புப் பேரவைக் கூட்டம் கே.பழனிச்சாமி, மாரி தங்கம், சண்முகவேல் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்டச்செயலாளர் த.இசக்கித்துரை, மாவட்ட துணைச்செயலாளர் வேலாயுதம், மாவட்ட விதொச செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா, அனிமேனன், பி.எஸ்.எஸ்.போஸ், ஏ.சாமி, மாரியப்பன், சுந்தர், சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உள்ளாட்சி, பள்ளித் தூய்மைப் பணியாளர்கள் தர்மபுரியில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

சுகாதார ஊக்குனர்களுக்கு நிலுவையின்றி ஊதியம் வழங்க வேண்டும். சம வேலைக்கு சம ஊதியம் ரூ.20 ஆயிரம் வழங்க வேண்டும். 7வது ஊதிய குழு பரிந்துரைத்தபடி ஊதிய உயர்வுக்கான நிலுவைத் தொகை வழங்க வேண்டும். தூய்மைக் காவலர்களுக்குப் பணிப் பதிவேடு பதிவு செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, உள்ளாட்சிப் பணியாளர் சம்மேளனம், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்கள் சங்கம் மற்றும் பள்ளிக் கல்வி தூய்மைப் பணியாளர்கள் சங்கம் சார்பில், தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இதில் ஏஐடியூசி மாநிலச் செயலாளர் முருகராஜ், கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் கே.மணி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்கள். கட்சி மாநிலக் குழு உறுப்பினர் கமலாமூர்த்தி, ஏஐடியூசி மாவட்ட தலைவர் முருகன், துணைத் தலைவர் சுதர்சனன் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## டெங்கு கொசுப்புழு ஒழிப்பு முன்களப் பணியாளர் சங்க
## கோரிக்கை விளக்கக் கருத்தரங்கம்




தமிழ்நாடு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு முன்களப் பணியாளர் சங்கத்தின் சார்பில், பணிப் பாதுகாப்பு, ஊதிய உயர்வு, மாத ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திக் கோரிக்கை விளக்கக் கருத்தரங்கக் கூட்டத்திற்கு, மாவட்ட தலைவர் பிரபாகன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சந்திரன் வரவேற்றார். சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் ஜி.ஆர்.இரவிந்திரநாத், தமிழ்நாடு டெங்கு, கொசு ஒழிப்பு முன்களப் பணியாளர் சங்க கவுரவச் செயலாளர் ஏ.ஆர்.சாந்தி, கட்சியின் தருமபுரி மாவட்டச் செய்லாளர் எஸ்.கலைச்செல்வம் ஆகியோர் கோரிக்கைகள் குறித்துப் பேசினார்கள்.

இதில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் முருகன், மாவட்டப் பொதுச் செயலாளர் கே.மணி, கொசுப்புழு ஒழிப்புச் சங்க நிர்வாகிகள் சதீஸ், சின்னமணி, பூமிநாதன், உள்ளாட்சிப் பதியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன், செல்வி, மேனகா மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## முசிறியில் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வாயிற் கூட்டம்




போக்குவரத்துத் தொழிலாளர்களிடம் அத்துமீறிச் செயல்படும் இளநிலை உதவியாளர் டிராபிக் பி.நேரு மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஏஐடியுசி தொழிற்சங்க முசிறி கிளை சார்பாக, முசிறி பேருந்து டெப்போ முன்பாக கிளைத் தலைவர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. இதில் திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ், அரசுப் போக்குவரத்துக் கழக கரூர் மண்டல கௌரவத் தலைவர் ராஜேந்திரன், மத்திய சங்கத் தலைவர் பழனிச்சாமி, பொதுச் செயலாளர் விஜயகுமார், பொருளாளர் சக்திவேல், டாஸ்மார்க் பணியாளர் சங்க மாவட்டச் செயலாளர் பவளக்கண்ணன் உள்ளிட்டோர் உரையாற்றினார். கிளைச் செயலாளர்கள் ஞானவேல் நன்றி கூறினார்.

## தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் பென்னாகரத்தில் ஆர்ப்பாட்டம்



தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில், பென்னாகரம் இந்தியன் வங்கி முன்பு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாநிலத் தலைவர் நா.பெரியசாமி முன்னாள் எம்.எல்.ஏ, கட்சியின் தருமபுரி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநிலச் சிறப்பு தலைவர், ந.நஞ்சப்பன் முன்னாள் எம்எல்ஏ, ஆகியோர் கண்டன உரையாற்றினர். பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினார்கள். முடிவில் மாநிலக் குழு உறுப்பினர் சி.சிவன் நன்றி கூறினார்.

## உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும்

### வழக்கறிஞர் மாநிலச் சிறப்புக் கூட்டத்தில் தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழக்கறிஞர்கள் பங்கேற்ற மாநிலச் சிறப்புக் கூட்டம் இன்று (13.04.2025) காலை திருச்சி மாவட்டக் கட்சி அலுவலகத்தில் மூத்த வழக்கறிஞர் வெ.அழகிரிசாமி முன்.எம்.பி தலைமையில் நடைபெற்றது. இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் திருச்சி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம்.செல்வகுமார் வரவேற்றார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி பங்கேற்று அரசியல் நிலைகள் குறித்து விளக்க உரையாற்றினார். எதிர்காலப் பணிகள் குறித்து மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் மு.அ.பாரதி அறிக்கை முன் வைத்தார். இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் மாநில நிர்வாகக் குழு முடிவுகளை முன்வைத்து இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.அருணாச்சலம் உரையாற்றினார்.

கட்சியின் மாநகர மாவட்டச் செயலாளர் ஆர்.சிவா வாழ்த்திப் பேசினார். ப.மா. பாலமுருகன், கே.கே.சாமி, கே.ஆர். ராமமூர்த்தி, பெ.கணபதிசுப்பிரமணியன், ஆர்.முருகன், என்.கார்த்திகேயன் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களை முன்வைத்துப் பேசினர்.

வழக்கறிஞர்கள் சட்ட திருத்த வரைவு மசோதாவை முழுமையாக ரத்து செய்ய வேண்டும், சட்டமன்றத் தீர்மானத்திற்கு மதிப்பளித்து உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும், வழக்கறிஞர்கள் பாதுகாப்புச் சட்டத்தை உடனே இயற்றிட வேண்டும், நீதியரசர் சத்யநாராயணா அவர்களின் விசாரணை அறிக்கை உடனடியாக ஒன்றிய அரசுக்கு அனுப்பி மூன்று புதிய குற்றவியல் சட்டங்களையும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும், வழக்கறிஞர்கள் சேம நல நிதியை ரூபாய் 25 லட்சம் என அதிகரித்து வழங்க வேண்டும், உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் வெளிப்படைத்தன்மையோடு இடஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட வேண்டும், உச்ச நீதிமன்றக் கிளையை தமிழ்நாட்டில் நிறுவிட வேண்டும், விசாரணை நீதிமன்றங்களில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், மே 20 நடைபெற உள்ள பொது வேலை நிறுத்தத்தில் வழக்கறிஞர்கள் திரளாகப் பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மதுரையில் பொதுவேலை நிறுத்த ஆயத்த மாநாடு




பாசிச மோடி தலைமையிலான பாஜக அரசை எதிர்த்து, அனைத்திந்தியத் தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு, மே 20ல் அறிவித்துள்ள பொது வேலை நிறுத்த ஆயத்த மாநாடு, மதுரையில் அனைத்துத் தொழிற்சங்கங்களின் சார்பாக ஐஎன்டியுசி ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஏஐடியூசி கே.சேது, எல்பிஎப் கணேசன், சிஐடியு லெனின், எச்எம்எஸ் மாநிலத் தலைவர் பாதர்வெள்ளை, எம்எல்எப் மகபூப்ஜான், யுடியுசி ஆண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வேலை மறுக்கப்பட்ட விர்கோ பாலிமர் தொழிலாளர்கள் அமைச்சரிடம் முறையீடு



செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் தொழிற்பேட்டையில் உள்ள விர்கோ பாலிமர் நிறுவனத்தில், 700 தொழிலாளர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அதில் 87 தொழிலாளர்கள் மட்டுமே நிரந்தரத் தொழிலாளர்கள். மற்றவர்களில் பெரும்பாலானோர் வட மாநிலத் தொழிலாளர்கள்.

கடந்த 2024 ஜுன் 1 ம் தேதி முதல் அமல்படுத்த வேண்டிய புதிய ஊதிய உயர்வு, நேரடிப் பேச்சுவார்த்தையின் போது, சில அளவீடுகளில் ஏற்பட்ட முரண்பாட்டால் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு, தொழில் தகராறு தாவா எழுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது. சுமூக தீர்வுக்காக தொழிற்சங்கம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் நிராகரித்த நிர்வாகம், தொழிலாளர் துணை ஆணையர் கொடுத்த அறிவுரைகளையும் தொடர்ந்து புறக்கணித்து வருகிறது.

யுனிட் 1 ஐ திட்டமிட்டு மூடுவதற்கான முயற்சிகளை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. மெஷின்களையும், மூலப் பொருட்களையும் இங்கிருந்து யூனிட் இரண்டிற்கு மாற்றியதோடு, கம்பெனியின் பெயரை தாமோதர் ட்ரேட் லிங்க் லிமிடெட் என்று மாற்றி உள்ளார்கள். தொழிலாளருக்கு வேலை மறுப்பதோடு, சம்பளம் வழங்கவும் மறுத்து வருகிறார்கள். இனிமேல் இந்தத் தொழிலாளர்களுக்கு இங்கு வேலை இல்லை என்று உறுதியாகக் கூறி வருகின்றனர்.

தளி சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் அவர்களுடன் சென்று, தொழிலாளர் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களை, சங்கத் தலைவர் எம்.ஜஹாங்கீர், செயலாளர் வி.குமரவேல், நிர்வாகிகள் வி.பாலாஜி, கே.கோபால்சாமி, எம்.துரை கண்ணு ஆகியோர் சந்தித்து மனு அளித்தார்கள். அமைச்சர் உறுதியான நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். பின்பு தொழிலாளர் துறை செயலாளர் வீரராகவராவ் அவர்களையும் சந்தித்து மனு அளிக்கப்பட்டது.

## பொண்ணனியாறு அணைத் தண்ணீரை வீணடிப்பதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




மணப்பாறை தாலுகா வையம்பட்டி ஒன்றியம், முகவனூர் ஊராட்சியில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில், பொண்ணனியாறு அணை 12 ஆண்டுகள் கழித்து, மாவட்ட ஆட்சியர் திறந்து வைக்க வந்தபோது, வாரிகள் தூர்வாராமல் உள்ளது. தற்போது திறந்தல் விவசாயத்திற்கும் பயன்படாது. எனவே அணையைத் திறக்க வேண்டாம் என்று விவசாயிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதைப் பொருட்படுத்தாமல், அணையைத் திறந்த மாவட்ட நிர்வாகத்தைக் கண்டித்தும், உரிய பருவ காலத்தில் அணையைத் திறக்கவும் வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாய சங்க மாவட்டக் குழு உறுப்பினர் தங்கராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆரோக்கியம், பாலு, பிரான்சிஸ், ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விதொச தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் பி.கணேசன், மாவட்ட தலைவர் சண்முகானந்தம், போகுவரத்துச் சம்மேளன மாநில துணைப் பொதுச் செயலாளர் சுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜ், ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் ஜனசக்தி உசேன், கட்டுமானச் சங்க வீராசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

## கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் முறைகேடு

### கள்ளக்குறிச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருநாவலூர் ஒன்றிய குழு சார்பில், கலைஞர் கனவு இல்ல திட்டம் தகுதியானவருக்கு வீடு வழங்கக் கோரி, ஒன்றிய செயலாளர் ஜி.தாமோதரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சியின் மாவட்டப் பொருளாளர் மா.வெங்கடேசன் கண்டன உரை நிகழ்த்தினார். ஒன்றிய துணைச் செயலாளர் ஏ.கே.வேல்முருகன், சுப்பிரமணியன், மணிகண்டன் முன்னிலையில், ஒன்றியப் பொருளாளர் எ.செந்தில் நன்றி உரை கூறினார்.

## திருப்பத்தூர் நகரச் செயலாளர் தோழர் கே.முருகன் மறைவுக்கு அஞ்சலி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பத்தூர் நகரச் செயலாளர் தோழர் கே.முருகன் அவர்கள் 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை 12.30 மணிக்கு மாரடைப்பால் காலமானார். மாவட்டச் செயலாளர் சுந்தேரசன் தலைமையில் மாவட்டம் முழுவதிலிருமிருந்து திரளானோர் பங்கேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மாநிலத் துணைச் செயலாளர் மூ.வீரபாண்டியன் நேரில் பங்கேற்று அஞ்சலி செலுத்தினார். குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார் மற்றும் அனைத்துக் கட்சியின் பொறுப்பாளர்கள் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

மறைந்த தோழர் கே.முருகனுக்கு செல்வி என்ற மனைவியும், கௌசல்யா, கோகிலா, பிரித்தா ஆகிய மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர்.

# ஜெயின் கோவில் இடிப்பு, தேவாலயத்திற்குள் வன்முறை..

# பற்றிப் படரும் இந்துத்துவ பாசிசம்



வ.மணிமாறன்

**ஆர்எஸ்எஸ், பாஜகவின் மதவாத, வெறுப்பு அரசியல் இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல, சிறுபான்மையினர் அனைவருக்கும் எதிரானது. மும்பை ஜெயின் கோவில் இடிப்பும், அகமதாபாத் தேவாலயத்திற்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டதும், இதற்கு அரசுக் கட்டமைப்பு அரணாக இருந்ததும் அதிர்ச்சி அளிக்கக் கூடியது.**

### திகம்பர ஜெயின் கோவில் இடிப்பு

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் விலே பார்லே பகுதியில் திகம்பர ஜெயின் கோவில் உள்ளது. பழமையான இந்தக் கோவிலில் சமணர்கள் (ஜெயின்) வழிபட்டு வந்தனர். 2020 ஆம் ஆண்டு முதல் இந்தக் கோவிலை இடிக்க பிர்கான்மும்பை மாநகராட்சி நிர்வாகம் (BMC) தொடர்ந்து முயன்று வருகிறது. பாஜக ஆளும் மாநிலம் என்பதால், உள்ளாட்சி நிர்வாகத்தின் மூலமே இடித்துவிடலாம் என சங்கிகள் திட்டமிட்டனர். கோயிலை இடிக்க 2020 நவம்பர் 11 முதல் மாநகராட்சி முயன்று வருகிறது.

பழமையான பங்களா ஒன்றுக்குள் இருக்கும் திகம்பர ஜெயின் கோவில் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்றது மாநகராட்சி. சட்டப்பூர்வமாக கட்டப்படவில்லை என்றது. இருப்பினும் ஜெயின் பிரிவினரின் எதிர்ப்பாலும், நீதிமன்றம் மற்றும் அரசியல் தலையீடுகளாலும் திகம்பர ஜெயின் கோவில் தப்பிவந்தது.

கோவிலை இடிப்பதற்கு எதிராக ஜெயின் பிரிவினர், மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். ஜெயின் கோவிலை இடிக்கக் கூடாது என இடைக்காலத் தடை பெற்றனர். இந்த வழக்கு ஏப்ரல் 16 ஆம் தேதி விசாரணைக்கு வர இருந்தது. சமண தெய்வங்கள் காப்பாற்றப்பட்டுவிடும். திகம்பர ஜெயின் கோவில் தப்பிவிடும் என ஜெயின்கள் நம்பிக்கையோடு இருந்தனர்.

ஆனால், மும்பை உயர்நீதிமன்றம் கோவிலை இடிக்கவே கூடாது என நிரந்தரமாகத் தடை விதித்துவிட்டால் என்ன செய்வது? என்று சங்கிகள் கவலைப்பட்டனர். இதனால், அன்றைய பொழுது விடிவதற்கு முன்பு, புல்டோசர்கள் கோவிலைச் சூழ்ந்து நின்றன. திகம்பரர் உள்ளிட்ட கடவுள்கள் தவிர கோவில் இடித்து நொறுக்கப்பட்டது. தகவலறிந்து திரண்ட ஜெயின்கள், தங்களின் கோவிலைக் காப்பாற்ற முடியவில்லையே என கண்ணீர் விட்டனர். திகம்பரக் கடவுளுக்கும் திகைப்புதான்.





ஆர்எஸ்எஸ், பாஜக இந்துத்துவ அமைப்பினருக்கு சிறுபான்மையினர் என்றாலே எட்டிக்காய்தான். அவர்கள் இஸ்லாமியர்களாக இருந்தால் என்ன? ஜெயின்களாக இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்.

### தேவாலயத்திற்குள் புகுந்து அமளி

குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் ஈஸ்டர் திருநாள் (ஏப்ரல் 20) அன்று தேவாலயம் ஒன்றில் நூற்றுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

கல்வாரி நோக்கி கால்களைக் கடித்து
கருணை தேவனை பின்தொடர
மனம் வருந்தி நீ வருவாயா..
மனம் திருந்தி நீ வருவாயா..
பழிகளைச் சுமத்தினரே பாவிகள் ஒன்றுசேர்ந்து
சிலுவை சாவினையே சுமத்தி இகழ்ந்தனரே..

என்று மனம் உருகிப் பாடிக்கொண்டிருந்தனர். திடீரென கையில் தடிகளுடன், மிரட்டும் தொனியுடன் பஜ்ரங்தளம், விஷ்வ இந்து பரிஷத்தை சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட சங்கிகள் புகுந்து, ‘ஜெய் ஸ்ரீராம்‘ ‘ஜெய் ஸ்ரீராம்‘ என கத்திக் கொண்டே இருந்தனர். உயிர்த்தெழுந்த இயேசுவை மனமுருகி வழிபட்டதை அவர்கள் நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தனர். ‘ஜெய் ஸ்ரீராம்‘ என்பதை நிறுத்திவிட்டு “இந்துக்களை மதம் மாற்றுகிறீர்களா?” என்று எச்சரிக்கும் தொனியுடன் கத்தினர். அமைதிப் பிரார்த்தனைக் கூடம் அமளிக் கூடாரமாகி விட்டது. இந்தக் காட்சி சமூக ஊடகங்களில் பரவியது. சங்கிகள் பத்துப் பேர் மீது வழக்குப் போட்டிருப்பதாக குஜராத் காவல்துறை கூறியுள்ளது. ஆனால் அவர்களின் பெயர்களை தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

### இஸ்லாமியர்களின் கொந்தளிப்பு

ஒன்றிய அரசு வக்ஃபு சட்டத்தை திருத்தியதுடன், உடனடியாக நடைமுறைக்கும் கொண்டுவந்துள்ளது. முறைகேடுகளைத் தடுப்பதற்கும், முறைப்படுத்துவதற்கும் கொண்டுவந்திருப்பதாக மோடி அரசு விளக்கம் அளித்தாலும், சட்டத் திருத்தங்களின் நோக்கம் அதுவல்ல. உண்மையில், வக்ஃபு சொத்துகளை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கும், நகரங்களில் உள்ள வக்ஃபு நிலங்களை கார்ப்பரேட்டுகளுக்குத் தாரைவார்ப்பதற்கும் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள்தான் அவை. இதனை உணர்ந்துள்ள இஸ்லாமியர்கள் கொந்தளித்துப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் நடைபெறும் இடங்களில் எல்லாம் லட்சக்கணக்கான இஸ்லாமியர்கள் திரண்டு வருகின்றனர்.

### சட்டத்தின் ஆட்சிக்கு ஆபத்து

பாஜக அரசின் நடவடிக்கைகள் வெறுப்பு அரசியலை விரிவாக விதைத்துள்ளன. சமூகத்தில் ஆழமான பிளவுகளை உருவாக்கியுள்ளன. நீதித்துறை, தேர்தல் ஆணையம் போன்ற தன்னாட்சி நிறுவனங்களிலும், காவல்துறை போன்ற அரசுத் துறைகளிலும் சங்கிகளை ஊடுருவச் செய்ததுடன், தலைமைப் பொறுப்புகளிலும் நியமித்துள்ளனர். அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் நீர்த்துப் போகச் செய்து, இந்துத்துவ அரசியல் திட்டத்தை நடைமுறைப்படுத்த வழியமைத்துக் கொடுக்கின்றனர்.

மொத்தத்தில், ஒன்றியத்தையும் மாநிலங்களையும் ஆளும் பாஜக, இஸ்லாமியர்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் மீது தாக்குதல் தொடுத்து வருகின்றது. மத வெறுப்பு அரசியலுக்கு ஆதரவையும் அதனை மறைக்கும் பணியையும் செய்து வருகின்றது.

எனவே பாசிச பாஜகவுக்கு எதிராக ஓரணியில் திரளும் உழைக்கும் மக்களின் போராட்டங்கள்தான், பாகுபாடான சட்டங்களையும் அரசின் கொள்கைகளையும் திரும்பப்பெற வைத்திடும். நெருக்கடியில் இருக்கும் சட்டத்தின் ஆட்சியையும் மதச்சார்பற்ற ஜனநாயகத்தையும் காப்பாற்றும். அந்த நாள் வெகுதொலைவில் இல்லை.

தொடர்புக்கு: 9500001224

# எளியவரைச் சிந்தித்த இடதுசாரி போப்!

*இயேசு பிரான் உயிர்த்தெழுவதாகக் கருதப்படும் ஈஸ்டர் திருநாளில், 2025 ஏப்ரல் 21ஆம் தேதி காலை, கிறித்துவ மதகுருவான போப் பிரான்சிஸ் வாட்டிகனில் உள்ள தனது இல்லத்தில் இயற்கை எய்தினார். அவரது இறுதி ஊர்வலம் ஏப்ரல் 26ல் நடைபெற்றது.*

*1200 ஆண்டுகளுக்குப் பிறகு, ஐரோப்பியரல்லாத அவர் போப்பாண்டவராகத் தேர்வு செய்யப்பட்டார்.*

*நீதி, உலக அமைதி மற்றும் ஏழைகளுக்கான குரலை அவர் எதிரொலித்தார்.*

*“மக்களை விலக்கி வைத்து, சுரண்டும் போது பொருளாதாரம் கொலை செய்கிறது” என்று சொன்னவர் அவர்.*

*கட்டற்ற லாப வேட்டை நடத்துகிற முதலாளித்துவத்தை அவர் கடுமையாக விமர்சித்தார். சமத்துவ மறுப்பையும், உயர்நிலையில் இருப்பவர்களுக்கு அனைத்துச் சலுகைகளும் தந்தால், அடி நிலையிலுள்ளவர்கள் பலன் பெறுவார்கள் என்ற கோட்பாட்டையும் அவர் எதிர்த்தார்.*

*மனிதர்களுக்கு நியாயமான ஊதியமும், கண்ணியமான வாழ்க்கையும் கிடைக்க வேண்டும் என்று வாதிட்டார்.*

*கண்மண் தெரியாது இயற்கை வளத்தைச் சீரழிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் காலநிலை மாற்றம் குறித்து அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார். சுற்றுச்சூழலுக்கு இழைக்கப்படும் தீங்கும் சமூக அநீதியும் ஒன்றுதான் என்றார் அவர்.*



*புலம்பெயர்ந்தோர் உரிமைகளுக்காகவும், அகதிகளின் வாழ்வுக்காகவும், மனித விழுமியங்களுக்காகவும் அவர் தொடர்ந்து பேசி வந்தார்.*

*இதனால் திருச்சபை பிரபலங்கள் அவரைக் கடுமையாக எதிர்த்து வந்தனர். அவரை ஒரு பெரும் பேரழிவு என்று வர்ணித்தனர். அவரது சீனத் தொடர்புகளுக்காக அவர் கண்டிக்கப்பட்டார். தொழிலாளர் அமைப்புகளுக்கு அவர் தரும் ஆதரவு பெரும் குழப்பமானதாகவும் மிகவும் ஆபத்தானதாகவும் இருப்பதாக விமர்சிக்கப்பட்டார்.*

*அதிலும் லெஸ்பியன், மூன்றாம் பாலினத்தவர் நலன்களுக்கு ஆதரவாக அவர் பேசிய போது, புனிதத்தையே கெடுத்து விட்டதாக மிகக் கடுமையாக அவர் விமர்சிக்கப்பட்டார்.*

*ரோமன் கத்தோலிக்க இறையியலில், இயேசு பிரானின் சீடரான, புனித பீட்டர்தான் முதலாவது போப். தற்போது மறைந்த போப் பிரான்சிஸ் 2013 இல் பதவி ஏற்ற 266வது போப்பாண்டவர் ஆவார். நம்பிக்கை, நியதி, ஒழுக்கம் ஆகிய விஷயங்களில் உலகளாவிய திருச்சபையின் மீது உச்ச அதிகாரம் கொண்டவராகக் கருதப்படும் போப்பாண்டவரைக் கூட, சுரண்டப்படுபவர்களுக்கு ஆதரவாகப் பேசினால் லாப வேட்டையாளர்கள் விட்டு வைக்கவில்லை.*

*நிரந்தர நித்திரை அடைந்து விட்ட போப் பிரான்சிஸ், எளியவர் மனங்களில் நிலைத்து வாழ்வார்.*

# கலை இலக்கியப் பூங்கா

## கவிஞர் தமிழ்ஒளி ஆக்கங்கள் குறித்த கருத்தரங்கம்

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், திண்டுக்கல் மாவட்டக் குழுவும் இணைந்து நடத்திய, கவிஞர் தமிழ்ஒளி ஆக்கங்கள் குறித்த கருத்தரங்கத்திற்கு, மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஆ.ச.சேரிவாணன் தலைமை வகித்தார். என்சிபிஎச் கிளை மேலாளர் சு.அய்யப்பன் வரவேற்றார். கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், தமிழ்நாடு கலை இலக்கியப் பண்பாட்டு மையத்தின் தலைவர் செ.சகாய செல்வராஜ், பட்டதாரி ஆசிரியர் மார்டின் ராஜகுமார், கவிஞர் ஆ.சுசிலா மேரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

முதல் அமர்வுக்கு பெருமாள் அகரன் தலைமையேற்று, தமிழர் சமுதாயம் பற்றி, தமிழ்ஒளி கருத்தும் விமர்சனமும் என்ற பொருண்மையிலும், முனைவர் தே.ரோசி சாகேதமும் தமிழ்ஒளியும் என்ற பொருண்மையிலும், கவிஞர் ஆரா அருணா வந்த விடுதலை யாருக்கடா? கவிதையின் கருத்தும்காலமும்என்றபொருண்மையிலும், இரண்டாம் அமர்வுக்கு பேராசிரியர் குழந்தை தலைமையேற்று, புத்தர் பிறந்தார் காவியத்தில் பண்பாட்டுக்கூறுகள் என்ற பொருண்மையிலும், கவிஞர் தாமோ தமிழ்ஒளி கண்ட தமிழ்க்காதல் என்ற பொருண்மையிலும், பெ.தர்மராஜ் தமிழ்ஒளி மே தின கவிதையில் உலக நோக்கு என்ற பொருண்மையிலும், மூன்றாம் அமர்வுக்கு பேராசிரியர் மு.சண்முகப்பிரியா தலைமையேற்று, மாதவி பெண்ணின் முதல் குரல் என்ற பொருண்மையிலும், முனைவர் க.செந்தில் ராசா தமிழ்ஒளி கவிதைகளில் தமிழ்நாடும் மொழியும் என்ற பொருண்மையிலும், நான்காம் அமர்வுக்கு கவிஞர் சொக்கமேளா தலைமையேற்று தமிழ்ஒளி சிறுகதைகள், கதைமாந்தர்களும் சமூகச்சூழலும் என்ற பொருண்மையிலும், கா.பழனிக்குமார் மாதவி காவியம் ஓர் ஆய்வு என்ற பொருண்மையிலும், கவிஞர் முராநி கணபதி தூக்கிலிடப்பட்டார் கவிதை சொல்லும் தோழமை அரசியல் என்ற பொருண்மையிலும், ஐந்தாம் அமர்வுக்கு பேராசிரியர் கவிஞர் தமிழ் சிவா தலைமையேற்று தமிழ்க்காப்பிய மரபில் வீராயி என்ற பொருண்மயிலும், அ.வைத்தியலிங்க பூபதி இரண்டு மரக்கால் சிறுகதை, புனைவின் யதார்த்தமும் வறுமையும் என்ற பொருண்மையிலும், கவிஞர் கவியோவியத்தமிழன் தமிழ்ஒளி கவிதைகள், விளிம்பு நிலையினர் குறித்த அபிப்பிராயங்கள் என்ற பொருண்மையிலும், கவிஞர் திண்டுக்கல் தமிழ்ப்பித்தன் தமிழ்ஒளி குட்டிக்கதைகள், இயற்கைக்கும் மாந்தர் உறவுகளுக்கும் வழிமொழியும் மதிப்பீடுகள் என்ற பொருண்மையிலும் உரை நிகழ்த்தினர்.

எம்.வி.எம் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் பெ.சண்முகவேல் கலந்து கொண்டு கலந்துரையாடலில் கருத்துகளைப் பகிர்ந்தார். நிகழ்வில் தமுஎகச மாநிலக் குழு உறுப்பினர் மோகனா சோமசுந்தரம், மாணவி தமிழ்ச்செல்வி, என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் இரா.மகேந்திரன் அவர்கள் கலந்து கொண்டார். இறுதியாக கவிஞர் பூர்ணா நன்றி கூறினார்.

## பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் படிப்பகம் திறப்பு விழா

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டத்தில் உள்ள நல்லூர்பட்டி என்ற சிறிய கிராமத்தில் 14.4.2025, திங்கட்கிழமை அன்று பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் படிப்பகம் திறப்பு விழா நடைபெற்றது.



விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் கரிசல் இலக்கியக் கழகத்தின் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் அவர்கள் படிப்பகத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

அவர் தன்னுடைய உரையில் மக்கள் அனைவரும், அனைத்து நிலைகளிலும் சமத்துவத்தை அடைய நாமெல்லாம் உறுதியேற்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் பொதுச் செயலாளர் டாக்டர் அறம், மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர் ராமசுப்பிரமணியன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் உதயசங்கர், சண்முகம், கவிஞர் நந்தன் கனகராஜ், கவிஞர் மைதிலி மற்றும் எழுத்தாளர்கள் மதிக்கண்ணன், காமராஜ், கா.சீ.தமிழ்க்குமரன், தமிழ்ச்செல்வன், பெரிய மகாலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

படிப்பகத்தில் அண்ணல் டாக்டர் அம்பேத்கர், மாமேதை காரல் மார்க்ஸ், தந்தை பெரியார் படங்கள் திறக்கப்பட்டன. படிப்புகள் திறப்பு விழாவை முன்னிட்டு மரக்கன்றுகளும் நடப்பட்டன.

அந்தச் சிறிய கிராமத்தின் மற்றொரு சிறப்பம்சமாக, கிராமத்தின் நுழைவாயிலில் "ஜாதி, மதம், இனம், மொழி, போட்டி, பொறாமை, பழி, கோபம், பகை இவை அனைத்தும் மறந்து ஓர் உண்மையான மனிதனாக உள்ளே நுழையவும் நல்லூர் பட்டி தங்களை அன்புடன் வரவேற்கிறது" என்ற பதாகை வைக்கப்பட்டுள்ளது.

## தோழர் டி.ராஜாவுடன் கியூபா தூதர் சந்திப்பு



◆ இந்தியாவுக்கான புதிய கியூபா தூதர் ஜுவான் கார்லோஸ் மார்சன் அக்விலேரா ஏப்ரல் 21 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான டெல்லி அஜாய் பவனுக்குச் சென்றார். கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜாவை சந்தித்துப் பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர்கள் பல்லப் சென்குப்தா, டாக்டர் பால்சந்திர காங்கோ ஆகியோர் உடனிருந்தனர்.

## கனிமொழி எம்.பியுடன் மாதர் சங்கப் பொறுப்பாளர்கள் சந்திப்பு



◆ நாடாளுமன்ற உறுப்பினர் திமுக மகளிர் அணிச் செயலாளர் திருமிகு கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்களைச் சந்தித்து எழுத்தாளர் தோழர் இராஜம் கிருஷ்ணன் அவர்களின் நூற்றாண்டு விழா அழைப்பிதழை தோழர்கள் பி.பத்மாவதி எக்ஸ் எம்.எல்.ஏ, தோழர் மு.கண்ணகி மற்றும் டாக்டர் சாந்தி ஆகியோர் வழங்கினர்.

## நூறு நாள் வேலைத்திட்ட நிதியை விடுவிக்காத ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்





■ தமிழ்நாட்டுக்கான நூறு நாள் வேலைத்திட்ட (MGNREGA) நிதியை விடுவிக்காத ஒன்றிய அரசைக் கண்டித்தும் வேலை செய்த நாட்களுக்கு உரிய கூலியை வழங்க வலியுறுத்தியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தேன்கனிக்கோட்டையில் ஏப்ரல் 21 அன்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். கே.சுப்பராயன் எம்.பி. உரையாற்றினார்.

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.
16 ஏப்ரல் 27 மே 03 2025
ஜனசக்தி
JANASAKTHI Tamil Weekly Cell: 9444331138
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# அகில இந்திய விவசாயிகள் சங்க மாநாடு - பெருந்திரளானோர் பங்கேற்ற பொதுக்கூட்டம்




















Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.